Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 20-12-1947 சனிக்கிழமை மலர் 15.

## எண்ணிப் பார்க்க வேண்டாமா?

[புதுவை வ. பொன்னம்பலம்]

★

1\. மலைபோன்ற செந்நெல்லை அளந்துவிட்டு
மங்குகிறான் ஒருமனிதன் மனமுடைந்து;
உலைவைக்க மணியரிசி இல்லையென்று
உருகுகிறான் ஒருமனிதன் உளம்வெதும்பி;
இலைவிழுமே என்றெண்ணி வீட்டினோரம்
இருக்கின்றான் ஒருமனிதன் குக்கலொத்து;
சிலைகட்டு நாட்டினிலே விழாநடத்தும்
தெரிசிக்கப் பக்தர்களே! வாரீரென்று.

2\. பாலின்றி உடல்மெலிந்து பரிதவிக்கும்
பச்சையிளங் குழந்தைகளோ கதறிநிற்கும்
காலைமுதல் மாலைவரை; காண்கின்றீர்கள்
கருதவில்லை சற்றேனும் கருத்தில்—ஐயோ!
ஓலையிலே எழுதிவைத்த சாத்திரத்தை
உண்மையென நம்பித்தம் அறிவிழந்து,
காலையிலே கற்சிலைக்குப் பாலையூற்றும்
கடவுளின் தொண்டர்களே கருதுவீரே!

3\. வானத்தை கூரையென் றெண்ணிக்கொண்டு
வாழுபவர் பலருண்டு இந்தநாட்டில்.
வானத்து விண்மீனை வருகவென்று
வரவேற்கும் குடிசைபல கோடியுண்டு.
மானத்தைக் காத்திடவே வழியிலாது
வருந்துபவர் கோடான கோடிப்பேர்கள்.
ஏனென்று இதைக்கேட்க எவருமில்லை
இருக்கின்றார் விழாநடத்தும் மனிதவர்க்கம்.

4\. கல்விதரு மனைத்தினையே நுகர்ந்திடாத
கணக்கற்ற சிறுவர்கள் காலமெல்லாம்
நல்லறிவு பெறுவதற்கு வழியிலாது
நாட்டினிலே வாழ்கின்றார் மாக்களாக.
செல்வர்கள் எண்ணவில்லை சிந்தைதன்னில்
செய்கின்றார் செலவுகளை மனமுவந்து
பல்லக்கில் ஊர்சுற்றும் சுவாமிகட்குப்
பணமென்றும் பாராமல்; பெருமைகொள்ள.

**சிறுவர் பகுதி:**

# அழுதபிள்ளை சிரித்தது.

[நா. முத்து]

கண்ணுச்சாமி என்றொரு வியாபாரி இருந்தார். அவருக்கு நிறையச்சொத்து இருந்தது. தன் மனைவி பொன்னம்மாளோடு அவர் சந்தோஷமாக வாழ்ந்துவந்தார். ஆனால் ஒரு குழந்தையில்லாதது அவர்களுக்குப் பெருங் குறையாகவே இருந்தது. அந்தக் குறை வெகு நாட்களுக்குப் பிறகு தீர்ந்தது. ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையைக் கவனமாக வளர்க்க விரும்பி ஒரு ஆயாளை வேலைக்கமர்த்தினர். அக்குழந்தைக்குப் பால் கொடுப்பதும், கொஞ்சி விளையாடுவதும்தான் பொன்னம்மாள் வேலை. மற்றபடி குழந்தையை வளர்ப்பது, நோய் நொடியில்லாமல் காப்பாற்றுவது, அழாமல் வைத்திருப்பதெல்லாம் அந்த ஆயாளின் வேலை. ஆயாள், குழந்தையை நன்றாகக் கவனித்துக் கொண்டதால் பெற்றோர்கள் குழந்தையைப் பற்றிக் கவலைப்படவே யில்லை. கஷ்டமில்லாமல் குழந்தையின்பத்தை அனுபவித்து வந்தார்கள்.

ஓராண்டாயிற்று. ஆயாள் வேலையிலிருந்து விலகி விட்டாள். வேறு ஆயாள் உடனே கிடைக்கவில்லை. தாயாரே குழந்தையைக் கவனிக்க வேண்டியதாயிற்று. அவளும் குழந்தையை நன்றாக வளர்க்கவே முயற்சித்தாள். இருந்தாலும் குழந்தை அடிக்கடி ஏதாவது தொந்தரவு செய்யும். பொன்னம்மாளால் காரணம் ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. பிச்சைக்காரனையோ, போலீஸ்காரனையோ, நாயையோ காட்டி மிரட்டி அடக்கிவிடுவாள். குழந்தையும் பயந்து அழுகையை நிறுத்தி விடும். அவளுக்கு அக்குழந்தை மேல் ஆசையும் அன்பும் வளர்ந்து வந்தாலும் குழந்தையை வளர்க்கத் தெரியவில்லை. அது அடிக்கடி அழுவதை அவளால் சகிக்க முடியவில்லை. ஆயாள் ஒருத்தியை வேலைக்கு வைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர். வரும் புதிய ஆயாள்கள் நிலைக்கவில்லை.

இப்பொழுது பொன்னம்மாள் குழந்தையை வளர்ப்பதற்குக் கொஞ்சம் கற்றுக் கொண்டு விட்டாள். ஆனால் ஒரு புதிய தொந்தரவு உண்டாகியது. குழந்தை தொட்டிலில் படுத்திருந்தது. பக்கத்திலுள்ள கட்டிலில் தாய் படுத்திருந்தாள். ஒரு விளக்கு தொட்டிலுக்குக் கீழே சிறிதாக எரிந்து கொண்டிருந்தது. எல்லாம் வழக்கம் போலவேதான் இருந்தன. திடீரெனக் குழந்தை 'வீர் வீர்' என்றலறியது. சாதாரணமாக அல்ல. சற்றுக் கடுமையாகத்தான். **குழந்தை ஒரு நாளும் அதுபோல் கதறி**யதில்லையே என்று பதற்றத்தோடு எழுந்து குழந்தையைப் பார்த்தாள். தூக்கத்தில் கதறியதோ என்ற சந்தேகம் அவளுக்கு. கண்விழித்துக் கொண்டுதான் அழுதது. சந்தேகம் போய்விட்டது. குழந்தையைத் தூக்கிக்கொண்டு பூச்சிகள் எதுவும் படுக்கையில் இருக்கிறதா என்று பார்த்தாள். சிறுதுரும்பு கூட அவள் கண்ணுக்குப் புலப்படவில்லை. அழுகை நின்றிருந்தது. பால் கொடுத்துச் சற்று நேரம் கழித்துப் படுக்கையில் போட்டாள். குழந்தை மீண்டும் கதறியது. பெற்றோர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பொன்னம்மாளுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. அழ ஆரம்பித்தாள். கண்ணுச்சாமியின்பாடு சங்கடமாகி விட்டது. அவர் ஓடிப்போய் டாக்டரை அழைத்து வந்தார். டாக்டர் குழந்தையைப்பரிசோதித்துமருந்துகொடுத்தார். "குழந்தையை மடியிலேயே வைத்திருங்கள் தூங்கியவுடன் தொட்டிலில் போடுங்கள் ஒன்றும் செய்யாது" என்று ஆறுதல் கூறினார். குழந்தை தூங்கியது. தொட்டிலில் போட்டாள் நன்றாகத் தூங்கி விட்டான். பெற்றோர்களும் நிம்மதியாகத் தூங்கினார்கள்.

மறுநாள் இரவு குழந்தை மீண்டும் அதேபோல் அழுதது. உடனே குழந்தையைத் தூக்கி வைத்தியர் கொடுத்த மருந்தைக் கொடுத்தாள். தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது தொட்டிலில் போட்டாள். பேச்சுக் குரல் கேட்டு குழந்தை எழுந்து கதற ஆரம்பித்தது, குழந்தை வேதனைப் படுவதை யாராலும் சகிக்க முடியவில்லை. குழந்தையைப் பார்க்க வந்தவர்கள் "குழந்தை பயந்து விட்டான். மந்திரிக்க வேண்டும். இது தெய்வக் கோளாறு" என்று சொன்னார்கள். பெற்றோர்கள் நம்பினர். நோயாயிருந்தாலும் பேயாயிருந்தாலும் போக்க வேண்டியது எங்கள் பொறுப்பு என்று கூறினார்கள். மறுநாட்காலை மந்திரவாதிகள் அழைக்க வரப்பட்டனர். மந்திரித்துத்தாயத்தை கழுத்தில் கட்டினர். அதை இழுத்து இழுத்து விளையாடியதுகுழந்தை. இரவில் முன்போலவே அழுதான். திறமையான மந்திரவாதிகள் "குட்டிச் சாத்தான் கோளாறு, முனியன் துணையால் முறியடித்து விடுவேன்" என்று கூறிச்செய்த மந்திர வித்தைகள் பலிக்கவில்லை. பணம்மட்டும் பறித்துச் சென்றனர்.

"குழந்தை இரவில் அடிக்கடி விழிப்பது இயல்பு. பசித்து அழுவதும் **இயற்கை. ஆனால் இப்படி அலறுவா**னேன். அதுவும் தொட்டி மெத்தையில் படுத்திருந்து விழிக்கும்போது அலறுவானேன்?" எல்லோரும் இப்படிச் சிந்தித்தனர். சிலருக்கு ஞானோதயம் உண்டாகியது" இந்த இடத்தை மாற்றுங்கள். இடராசியில்லாமல் இருக்கும். மாற்றினால் சரியாகப் போய்விடும்" என்றனர். இதுசெய்வதால் என்ன கஷ்டம்! வேறொரு அறைக்கு மாற்றப்பட்டது. சுத்தமான அறை. அழகிய வெள்ளைச் சுவர்களில் ஜன்னல் அமைக்கப் பட்டிருந்தது. தொட்டிலைச் சுத்தம் செய்து கடவுளைத் துதித்துக் கொண்டே குழந்தையை அதில் படுக்க வைத்தாள். விளக்கைத் தொட்டிலின் பக்கத்தில் நன்றாக எரியும்படி வைத்து விட்டுப் பக்கத்துக் கட்டிலில் பெற்றோர்கள் படுத்திருந்தனர். குழந்தை நன்றாக அசந்து தூங்கிக் கொண்டிருந்தது. மணி 4 இருக்கும். எழுந்து அலறினான், முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக அலறினான். பொன்னம்மாள் எழுந்து குழந்தையைத் தூக்கி அமர்த்தினாள். இடமாற்றம் பலன் தராததை அறிந்து தொட்டிலை மாற்றிவிடுதல் நலம் என்றனர் சிலர். அது ஒன்றுதான் பாக்கி. செய்து பார்த்தார்கள் பயனில்லை. மனம் சோர்ந்து விட்டனர். "குழந்தை கஷ்டப்படுகிறது. காரணம் குழந்தைக்குத்தான் தெரியும். வேறுயாருக்கும் தெரியவில்லை. குழந்தையால் அதைக் கூறமுடியாது. அதை உணர்ந்துகொள்ளவோ இதுவரை ஒருவராலும் முடியவில்லை. குழந்தை வேண்டும் வேண்டும் என்று நாங்கள் தவம் இருந்தது, குழந்தை இப்படிக் கஷ்டப்படுவதைக் காணவா" என்று தன்னிடம் பேசும் ஒவ்வொருவரிடமும் கூறி வருத்தப்பட்டுக் கொள்வார் கண்ணுச்சாமி. அவர்கள் நிலைமை பரிதாபகரமாக இருந்தது. ஆனால் பரிகாரம் ஒருவருக்கும் தெரியவில்லை.

ஒரு நாள் அவர் வீட்டிற்கு அவரின் நண்பர் ஒருவர் வந்தார். அவரிடம் பெற்றோர்கள் தங்கள் குறையைக்கூறி வருந்தினர். அவசரக் காரியமாக வந்த அவர் ஒரு நாள் தங்கிப் போக இசைந்தார். குழந்தையைக் கொண்டுவரச் சொல்லிப் பகல் முழுவதும் விளையாடினார். குழந்தை பசிக்கும் போது கூட அழவில்லை. தாயார் தினைவோடு வந்து பால் கொடுத்துச் சென்றாள்.

மாலை நேரம். வீட்டுத் திண்ணையில் குழந்தை உட்கார்ந்திருந்தது. அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். இருட்டி விட்டது. எங்கும் விளக்கேற்றப்பட்டது. அங்கும் ஒரு விளக்கை யேற்றி வைத்து விட்டு, "பகலெல்லாம் சிரிப்பான். இரவில் தான் கதறு கதறுன்னு கதறுவான்" என்று பொன்னம்மாள் அவரிடம் சொல்லி விட்டு வீட்டுவேலையைக் கவனிக்கப் போய்விட்டாள். விளக்கைக் கண்டதும் குழந்தை தாவிப் பிடித்து விளை

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

ரோஜா முத்தையா

### காட்சி 11.

[பறையறைவிக்கப்பட்ட சேதி கேட்டு இராம இலக்குமணருடன் சென்ற விஸ்வாமித்திரர் மிதிலை ஜனகன் மண்டபத்திற்குப் போய் தன் வருகையைச் சொல்லியனுப்புகிறார். வில் கொண்டு வரப்படுகிறது; அதாவது அந்த வில் ஒரு பெட்டியில் வைத்து இழுத்து வரப்படுகிறது.]

**விஸ்வாமித்திரர்:-** இராமா! இந்த வில்லை எடுத்து வளை!

[இராமன் எடுத்து வளைத்த மாத்திரத்தில் வில் ஒடிந்து விடுகிறது.]

**ஜனகன்:-** முனிவரே! சீதையை இராமனுக்கு மணம் முடித்துக் கொள்ளுங்கள்.

**விஸ்வாமித்திரர்:-** சரி, மகாராஜா! இராமனது தகப்பனுக்குச் சேதி சொல்லி அனுப்பி, அவரையும் வரவழைத்து முகூர்த்தம் நடத்தி விடுவோம். எல்லா ஏற்பாடுகளும் நடக்கட்டும்.

**ஜனகன்:-** சீதை கல்யாணத்தின் காரணமாய், என் சொந்தப் பெண் ஒருத்தி, என் தம்பி பெண்கள் இருவர் ஆக மூன்று பெண்களின் திருமணமும் இதுவரை தடைப்பட்டிருந்தது. அவற்றையும் முடித்து விடலாம் என்று நினைக்கிறேன். ஆதலால் அவர்களுக்கு வரன் பார்த்ததும் எல்லாம், ஒன்றாய் முடித்து விடலாமே.

**விஸ்வாமித்திரன்:-** இராஜனே! அந்தப் பெண்களை இராமனின் தம்பிமார்கள் மூவருக்கும் கொடுத்து விடலாமே!

**ஜனகன்:-** ஆகா! தங்கள் சித்தப்படியே செய்யலாம்!


**விஸ்வாமித்திரன்:-** இராஜனே! நான் சொன்னதாகத் தசரதனுக்கு இந்த விவரங்களை எல்லாம் சொல்லி, அவரது மற்ற மக்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு உடனே வரும்படியாக ஆள் அனுப்பு.

**ஜனகன்:-** அப்படியே செய்கிறேன்!

[காட்சி முடிகிறது]

### காட்சி 12.

மணி மண்டபத்தில் மணமக்கள் உள்பட அனைவரும் வருகின்றார்கள். திருமணம் முடிகின்றது. பிறகு மணமக்களும், தசரதனும், அவன் பரிவாரங்களும் அயோத்திக்குப் புறப்படுகின்றார்கள்.




### காட்சி 13.

[அயோத்திக்கு வந்து சில நாட்கள் கழிந்தன.]

**தசரதன்:-** (தனக்குள் யோசித்து) பரதா! உன் பாட்டனார் உன்னைப் பார்க்க ஆசைப்பட்டு, உன்னை அழைத்து வரும்படி உன் மாமனை அனுப்பியிருக்கிறார். நீ, சத்துருக்கனையும் அழைத்துக் கொண்டு அவருடன் சென்று அங்கு சௌக்கியமாய் இரு!

**பரதன்:-** பிதாவே! அப்படியே சென்று வருகிறேன்.

[காட்சி முடிகிறது]




### காட்சி 14.

[தசரதனின் அந்தப்புர மண்டபம்.]

**தசரதன்:-** சேவகா!

**சேவகன்:-** மகாராஜா!

**தசரதன்:-** ஓடோடி என் மகன் இராமனை அழைத்து வா!

**சேவகன்:-** இதோ அழைத்து வந்தேன்.

[விரைந்து போக எத்தனிக்கின்றான்.]

**தசரதன்:-** சேவகா! நில். நீ அழைத்து வருவதை வேறு யாரும் அறியக் கூடாது. ஜாக்கிரதையாக அழைத்து வரவேண்டும், தெரிகிறதா?

**சேவகன்:-** மகராஜ! அப்படியே செய்கிறேன்.

[என்று கூறி மறைய, தசரதன் ஆலோசித்தபடியே உலாவிக் கொண்டிருக்க, சேவகன் இராமனை அழைத்து வருகின்றான்.]

**இராமன்:-** தந்தையே வணக்கம்.

**தசரதன்:-** சுகமுண்டாகட்டும்! [சேவகன் பக்கம் திரும்பச் சேவகன் அகன்ற பிறகு] உன்னை ஏன் அழைத்தேன் தெரியுமா? இந்த நாட்டை நான் கைகேயிக்குக் கொடுத்து விட்டேன். ஏனென்றால், பரதன் தாயாகிய கைகேயி மிக்க அழகுடையவள் என்று கேள்விப்பட்டு அவளை மணக்க ஆசையோடு, அவளது தந்தை ஆகிய கேகய மகாராஜாவைத் தன் மகளைக் கொடுக்கும்படி கேட்டேன். அவர், எனக்கு முன்னமே இரண்டு பட்டஸ்திரி மனைவிகள் இருப்பதால் தன் மகளை மூன்றாவது மனைவியாகக் கொடுக்க முடியாதென்று சொல்லி விட்டார். எனக்கு அந்தப் பெண்ணின் மீது எல்லையற்ற ஆசை இருந்ததால், அந்தப் பெண்ணையே நான் பட்ட ஸ்திரியாகக் கொள்ளுவதாகவும், அவள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே எனது இராஜ்ஜியத்தைக் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டு விட்டேன். திருமணத்தின் போதே இராஜ்ஜியத்தை அவள் வசம் ஒப்புவித்து விட்டு இதுவரை அவளுக்கு ஆக நான் என்கின்ற தன்மையில் ஆட்சியை நடத்தி வருகின்றேன். இந்த ராஜ்ஜியத்தின் மீது படை எடுத்துவந்த வேற்றரசர் சிலருடனும் கைகேயி போர் செய்து வெற்றி பெற்று இருக்கிறாள். அந்த வெற்றியை நான் பாராட்டி அவள் சொல்லுகிறபடி நடப்பதாக வாக்குறுதியும்

கொடுத்திருக்கின்றேன். ஆதலால் அவள் மகன் பரதன்தான், இனிக் கிரமப்படி வார்சுதாரன் ஆவான். எனக்கு உன்மேல் பிரியம் அதிகம். உனக்கு நான் இருக்கும் போதே முடி சூட்டிவிட வேண்டுமென்பது என்னுடைய ஆசை. அதற்காகவே பரதனை அவன் பாட்டன் வீட்டிற்கு அனுப்பிவிட்டேன். சீக்கிரத்தில் உனக்கு முடி சூட்டு விழா நடத்தப் போகின்றேன். நீ அதற்குள்ளாகக் குடிகளுக்கும், கைகேயிக்கும் மிகவும் நல்ல பிள்ளையாக நடந்து கொள். இதை வெளியில் சொல்லாதே!

**இராமன்:-** அப்படியே. தந்தையே! தங்கள் சித்தம் என் பாக்கியம்.

[காட்சி முடிகிறது]

## காட்சி 15.

[சில ஆண்டுகள் கழிந்த பின்பு, தசரதன் தர்பார்.]

**தசரதன்:—** மந்திரிமார்களே! ஒரு விஷயம் உங்களோடு ஆலோசிக்க வேண்டும். அது மிகவும் இரகசியமானதும் அவசியம் நடந்துதீர வேண்டிய முக்கியமான காரியமும் ஆகும். அதை நடத்திக்கொடுக்க நீங்கள் எனக்கு உதவி செய்கிறீர்களா?

**தலைமை மந்திரி:-** மகாராஜா! தங்கள் கட்டளைக்கு மாறாக எப்போதாவது நடந்திருக்கின்றோமா? எப்பேர்ப்பட்ட பாபமான காரியமானாலும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறோம். தாங்கள் சிறிதும் யோசியாமல் எங்களிடம் சொல்லலாம்.

**தசரதன்:-** மந்திரிகளே! நான் இளைய ராணியாகிய கைகேயியை மணக்கும்போது, கிழவனாக இருந்ததாலும் பல மனைவிகளை உடையவனாக இருந்ததாலும், கேகய மன்னன், தன் மகளை எனக்குக் கொடுப்பதானால் அவளையே பட்ட மகிஷியாய் ஆக்கி அப்படியே நடத்தவேண்டுமென்றும், அவள் வயிற்றில் பிறக்கும் குழந்தைக்கே அயோத்தி இராஜ்ஜியத்தைப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டுமென்றும், அதற்காக அப்போதே [திருமணத்திற்கு முன்பே] நாட்டைக் கைகேயிக்குச் சுல்கமாகக் கொடுத்துவிடவேண்டுமென்றும், அவளுடைய பிரதிநிதியாகவே நான் ஆட்சி செலுத்த வேண்டுமென்றும் கேட்டார். நான் கைகேயியின் குணத்திலும், சாமர்

அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டு விட்டேன். அந்தப்படியே நடந்தும் வந்தேன் என்றாலும் கைகேயிக்குப் பிள்ளை உண்டாகாமல் இருப்பதற்காகப்பிரம்ம தேவன் கொடுத்தனுப்பிய பாயாசத்தில், பகுதியைக் கோசலைக்கும், காலே அரைக்கால் பாகத்தைச் சுபத்திரைக்கும், அரைக்கால் பாகத்தை மாத்திரமே கைகேயிக்கும் கொடுத்தேன். அப்படியிருந்தும் அவளுக்கும் பிள்ளை பிறந்து விட்டது. என்றாலும் நான் அந்தப் பிள்ளையாகிய பரதன், இங்கிருந்தால் அவளுக்குப் பூமி ஆசை வந்து விடுமென்றும், குடிகள் ஆதரவு ஏற்பட்டு விடுமென்றும் கருதியே அவனது பாட்டன் வீட்டுக்கு அனுப்பி விட்டேன், இன்று வரை அவனைச் சட்டை செய்யவுமில்லை. அழைத்து வரவுமில்லை. இந்த விஷயம் இராமனைத் தவிர, நம் குலகுரு வதிஷ்டரைத் தவிர இவ்விடம் வேறு யாருக்கும் தெரியாது. ஆதலால் பரதன் வருவதற்குள் என் பிரிய மகன் இராமனுக்கு அயோத்தியை முடி சூட்டி விடலாம் என்று கருதுகிறேன். காரியம் முடிந்து விட்டால் பரதனும், ஒன்றும் ஆட்சேபிக்க மாட்டான். ஏனென்றால் அவன் ஒன்றும் அறியாதவன். மிக்க சாதுவானவன். கைகேயியும் சூதுவாதற்றவள். அவளுக்கும் இந்த விஷயங்களில் இப்போது ஒன்றும் கவலை கிடையாது. இராமன் அவளிடத்தில் மிகவும் நல்ததனமாய் நடந்து, அவள் இராமனைத் தன் மகன் போலவே நினைக்கும்படி செய்து வைத்திருக்கின்றான். குடிகளிடத்திலும் அடிக்கடி நெருங்கிப் பழகி, ஒவ்வொருவருடைய யோக க்ஷேமங்களையும் கவனிக்கிறவன்போல் நடந்து, அவர்களையும் சுவாதீனப்படுத்தி வைத்திருக்கிறான். இந்தச் 'சமயம் மிகவும் சரியான சமயம். ஆதலால் உடனே முடித்து விடலாம் 'என்று நினைக்கின்றேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

**தலைமை மந்திரி:-** மகாராஜா! மிகவும் சரியான காரியம். [என்று சொல்லி மற்ற மந்திரிகளின் முகங்களைப் பார்த்து விட்டு] அப்படியே செய்துவிடலாம். இந்த விஷயங்களையெல்லாம் சொல்லாமல், குடி ஜனங்களையும் ஒரு வார்த்தை கேட்பது போல் கேட்டு அவர்கள் சம்மதத்தையும் பெற்றுவிடலாம் என்று கருதுகிறேன்.

**மற்ற மந்திரிகள்:-** ஆமாம் அது தான் சரி. [என்று ஏக காலத்தில் கூறுகின்றனர்.]

**தசரதன்:-** குடிகளை வரவழையுங்கள்.

**தலைமை மந்திரி:-** அப்படியே. அடே! சேவகா! நம் இராஜ்ஜியத்தில் முக்கியமான பெரிய மனிதர்களை அழைத்துவா!

சேவகன் தலை வணங்கிச் செல்லுகிறான்.

[காட்சி முடிகிறது.]

---

## புராணக் குப்பையில் புரளாது ஒழுக!

---


## மணமகளிர் தேவை.

சைவவேளாள வகுப்பைச்சேர்ந்த 32-வயதுள்ளவரும், மாதம் ரூ.60 வருமானம் உள்ளவருமான ஒருவருக்கு மறுமணம் செய்துகொள்ள அதே வகுப்பைச் சேர்ந்த 20-வயதுள்ள கைம்பெண் (விதவை) தேவை.

*     *

25-வயதுள்ள ஒரு வியாபாரிக்கு எக்குலமாயிருந்தாலும் சு. ம. திருமணம் செய்துகொள்ள மணமகள் தேவை.

கடிதங்கள் ரிஜிஸ்டர் தபால்மூலம் அனுப்பவேண்டும்.

M. P. பாலய்யா,
No. 25, N. 5, ரோட்,
அன்பு நிலையம், திருச்சி.





ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# நல்ல கேள்விதான்!

## என்னைக்கேட்டு என்செய்வது?

எந்த வேலை வேண்டுமானாலும் பார்க்கலாம். ஆனால் இந்த ஊர்சுத்தி வேலை இருக்கிறதே மகா தொல்லை. பொறுக்க முடிவதில்லை. எண்டா! இந்த வேலையை ஒப்புக் கொண்டோம் என்றுகூடச் சில சமயங்களில் தோன்றுவது உண்டு. நீங்கள் நினைக்கலாம் ரயில், பஸ் இவைகளில் போவதினால் ஏற்படும் அலுப்பினாலும், அங்கங்கே சாப்பாடு வசதி சரியாக இல்லாத அசௌகரியத்தினாலும், இம்மாதிரி நான் சொல்லுகின்றேன் என்று. அதுதான் இல்லை? அதைப்பற்றியெல்லாம் கூட எனக்குக் கவலையில்லை. போகிற பக்கங்களில் எல்லாம் நமது தோழர்கள் வந்து கூடிக் கொள்ளுகிறார்கள்: ஆம், அன்பினால் தான். அதுவும் ஈரோட்டிலிருந்து வந்திருக்கிற பேர்வழி என்று தெரிந்து விட்டால்,இன்னும் சொல்லவே வேண்டியதில்லை.வெகுநாளாக மனதிலேயே எண்ணிப் புழுங்கிக் கொண்டு இருந்த சந்தேகங்கள் — நடப்பு நிலை பற்றி ஈரோட்டு நிலவரம் என்ன என்று தெரிய விரும்பும் குறும்புக் கேள்விகள், ஐயா அவர்களின் குடும்பப் பெருமை - சொத்து - வீடு வாசல் முதலானவைகளை அறிந்து கொள்ள விரும்பும் ஆவலான வினாக்கள் - குடி அரசிலே ‘‘ஈட்டி’ ‘‘பெறுக்கி’’ ‘‘தெள்ளுமணி’’ என்றெல்லாம் புனை பெயர்களுடன் எழுதி வருகின்றவர்கள் யார் யார்? - என்பன போன்ற பல, பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே யிருப்பார்கள். நானும் சலிக்காமல் கேள்விக்குத் தகுந்த மாதிரி-கேட்பவருக்குத் தகுந்த மாதிரியெல்லாம் பதில் சொல்லி சமாளித்து வருகிறேன் என்றாலும் சில சமயங்களில் இரண்டொருவர் வந்து பொறுக்கி யெடுத்தாற் போல் சில விஷயங்களைப் பற்றி நான் வாய்திறப்பதற்கேயில்லாத வகையில் கேட்டு விடுகிறார்கள். அந்தக் கட்டத்தில் தான் எனக்கு இந்தஊர் சுத்திவேலை வேண்டாம் என்று தோன்றுகிறது.

உதாரணத்துக்குஒரு சம்பவத்தையே சொல்லுகின்றேன் கேளுங்கள். சென்ற வாரம் நான் போயிருந்த ஊரில் எதிர்பாராத வகையில் அவ்வூர்த் தோழர்கள் நடந்து கொண்டார்கள். அதாவது நான் மேலே சொன்ன , மாதிரியான கேள்விகள் எல்லாம் ஒன்றும் கேட்காமல், என்னைக் கண்டதும் நல்வரவு கூறிக் குளிக்க- சாப்பிட- தங்கியிருக்க ஏற்பாடு செய்து கொடுத்து விட்டு, அனைவரும் அவரவர்கள் வேலையாகச் சென்று விட்டார்கள். நானும் மத்தியானம் சாப்பிட்டு விட்டுநன்கு தூங்கி விட்டேன். சாயங்காலம் 5 மணிக்குத் தான் எழுந்திருந்தேன். இந்த ஊர்த் தோழர்கள் மாதிரியே எல்லா ஊரிலும் இருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே என்று சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தேன்.

அந்தச் சமயம்தான் 4, 5, தோழர்கள் கறுப்புச் சட்டையுடன் மாலை நேரப் பொழுது போக்குக்குப் புறப்பட்டிருக்கிற தோரணையில் வந்து என்னையும் ‘‘வாங்க சார்’’ வெளியே அப்படியே சற்று தூரம் போய் வரலாமே’’ என்று அன்புடன் அழைக்க நானும் உடன் சென்றேன்.

நல்லதொரு மைதானத்திற்குப்




போய் தனியாக நாங்கள் உட்கார்ந்தோம். உட்கார்ந்த சில நிமிஷம் எங்களுக்குள் மௌனம் நிலவியது. ஒருவரையொருவர் பார்க்கிறதும், ‘‘என் நீயே கேளேன்? என்று ஒருவரை யொருவர் கண்ணாலேயே பேசிக் கொள்வதுமாக இருந்தார்கள். இறுதியாக, எனக்கு அருகில் இருந்த தோழர் ‘‘என் சார்’ பெரியார் அவர்கள் தமிழ் எழுத்தில் சீர்திருத்தம். என்னும் பேரால் ணு, று, ஞ; ணை, லை, ளை, னை, ஆகிய எழுத்துக்களுக்குப் பதிலாக முறையே ணா, றா, னா ணை லை, னை என்று உபயோகிக்கின்ற முறை எப்பொழுதிருந்து ஆரம்பிக்கப் பட்டது என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?’’. என்று கேட்டார்.

நான் சற்று யோசித்து ‘‘நான் சொல்லுவது சரியாக இருக்குமானால், 1933, 1934-ல் ‘‘குடி அரசு’’ நின்று போய்‘‘புரட்சி’’என்றும்,‘‘பகுத்தறிவு’’ என்றும் நடத்தப்பட்டு வந்ததல்லவா? அப்பொழுது ‘‘பகுத்தறிவு’’ க்கடைசி வெளியீட்டில் - அடுத்த வாரம் அதாவது 1935 ம்வருஷம் ஜனவரி மாதம் முதல் கொண்டு, மேற்கண்டபடி எழுத்தில் சீர்திருத்தம் செய்யப் போவதாக ஒரு உபதலையங்கம் எழுதியிருப்பதாக ஞாபகம். என்? அதைப்பற்றி இப்பொழுது என்ன? ஒரு மாமாங்கத்துக்கு மேல்பட்டுப் போனதும்,இதுவரை எவராலும் - அதிலும் குறிப்பாக எந்தத் தமிழ்ப் பண்டிதர்களாலும் எதிர்க்கப்படாததுமான இந்த விஷயத்தில் இப்பொழுது உங்களுக்கென்ன சந்தேகம் பிறந்து விட்டது?’’ என்று நான் கேள்வி மேல் கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டேன்.

‘‘அவசரப்படாதிங்க, சார்! ஆம், பெரியார் அவர்கள் சென்ற ஒருமாமாங்கத்திற்கு மேலாகவே தன்னால் நடத்தப்பட்டு வரும் பத்திரிக்கைகள், பதிப்பக வெளியீட்டு புத்தகங்கள் அனைத்திலும் மேற் சொன்ன மாதிரி திருத்தங்களையே கையாண்டு வந்தும் கூட் அவரைப் பின்பற்றும் உண்மைச் சீடர்கள் என்பவர்கள் முதல் சுயநலத்துக்காகவே இயக்கத்துக்கு வந்தவர்கள் வரை எத்தனையோ பேர்களால்பத்திரிக்கைகள் நடத்தப்பட்டு வருவதும், புத்தகங்கள் வெளியிடப் பட்டு வருவதும் அவைகளில் எல்லாம் பெரியார் படங்களும், பெரியார் அவர்கள் பற்றிய வாழ்த்துரை - கட்டுரை - கவிதை போன்றவைகள் வெளிவருவதையும் காண்கிறோமே தவிர, பெரியார் அவர்களால் தக்க காரணம் காட்டி தமிழ் எழுத்தில் ஒரு சிறு மாறுதல் செய்யப்பட்டுப் பெரியார் அவர்களால் கையாளப் பட்டு வருகிற இந்த ஒரு சின்னச் சங்கதியைக் கூட ஏன் பின்பற்ற வில்லை?’’ என்பதுதான் எங்கள் சந்தேகம் என்று ஒரு சின்னப் பிரசங்கமாகவே கூறிக் கேட்டு முடித்தார்.

அப்பொழுது தான் புரிந்தது; மற்ற ஊர்த் தோழர்களைவிட இந்த ஊர்த் தோழர்கள் சரியான பேர்வழிகள் என்று. ஆனாலும் நான் வெகு சாமர்த்தியமாக ‘‘பேஷ்! ரொம்ப நன்றாய் இருக்கிறது உங்கள் சந்தேகம் ரொம்ப நியாயமானதுதான். ஆனால் கேட்க வேண்டியவர்களைக் கேளாமல்.விஷயம் ஒருவருக்கு எழுதி விலாசம் மற்றொருவர் பெயரை எழுதியது போலிருக்கிறது - என்னைக் கேள்வி கேட்பது என்ற போதிலும் பரவாயில்லை. நமது பேச்சு. வார்த்தைகளை நாம் இந்த 1947- டிசம்பர் மாத ‘‘குடி அரசு’’ இதழுக்கு அனுப்பிவிடுகின்றேன். அதைப் பார்த்த பின்னராவது யார் யார் உங்கள் கேள்விக்கு மரியாதை கொடுத்து, 1948-ம் வருஷம் ஜனவரியிலிருந்தாவது பெரியார் அவர்களின் கொள்கையை அனுசரிக்கப் போகிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்’’ என்றுகூறி, அத்துடன் அந்த விஷயத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டேன்.

(மேலே குறிப்பிடப் பட்டிருக்கும் ‘‘எழுத்தில் சீர்திருத்தம்’’ என்ற தலைப்பில் 30-12-1934ம் தேதி ‘‘பகுத்தறிவு’’ வார வெளியீட்டில் எழுதியிருக்கும் உபதலையங்கத்தின் முடிவில், ‘‘இன்னமும் தமிழ்ப் பாஷை எழுத்

### திருத்தம்.

4வது பக்கம் 3வது பத்தியில், புராணக் குப்பையில் புரளாது ஒழுக என்றிருப்பதை எழுக என மாற்றிப் படிக்குமாறு வேண்டுகின்றோம். (ஆர்)

# காந்தீயம்.

(இரா. சு. தங்கப்பழம்)

ஏறத்தாழ 25 ஆண்டுகளின் இடையறாத சுயமரியாதை இயக்கத்தின் சம்மட்டி அடிகளாலும்கூட அழியாது ஒழியாது, வளைந்துகொண்டு, நெளிந்துகொண்டு மீண்டும் வாழ்ந்துகொண்டு வருவதிலிருந்தே காந்தீயம் எத்தகைய கொடுந்தன்மையும், கடுமையும் வாய்ந்தது என்பது விளங்கும். பார்ப்பனீயத்துக்கும், தேசீயத்துக்கும் பிறந்த குழந்தையாக, ஆளுக்கொரு நீதி கூறும் மனுநீதி ஏஜண்டுகளின் பிரதான ஏஜண்டாக, அகிம்சை, உண்ணாவிரதம், கதர், கைத்தொழில், பழமை என்னும் பல உருவில் நாட்டிலே நடமாடி மக்களின் வாழ்வையும் உயர்வையும் பாழ்படுத்துகிறது காந்தீயம்.

காந்தீயம் போதையும், வெறியும் நிறைந்த ஒரு பெரும் லாகிரி வஸ்து என்பது, மதுவிலக்கு மந்திரி கனம் டானியல்தாமஸ் போன்றவர்களின் கண்ணுக்கும், கருத்துக்கும் எட்டாவிட்டாலும், சட்டசபையில் தள்ளி நூற்கும் அளவுக்கு வைத்தியநாதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறியும், காந்தீயப் போர்வைக்குள்ளே கட்சி தயாரிக்கும் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கும் இந்தியச் சோஷியலிஸ்டுகளுக்கும் உண்டாயிருக்கும் போதையும் மக்களுக்குத் தெரியாமல் போகாது. காந்தீயம் விஷத்தன்மை வாய்ந்தது என்பதை, வீட்டுக்கொரு ராட்டைபோட்டு, ஆலைகளை ஒழித்துக்கட்டி, ஆலை ஒழிப்புச் சட்டத்துக்கு ஆதரவு கொடுக்கும் அளவுக்கு, நம்மாகாண மந்திரிகளில் சிலரின் மதியை காந்தீயம் மயக்கியதிலிருந்து நாம் தெரியமுடியும். ஆளில்லா விமான ஆராய்ச்சி முதல் ஆகாயமண்டல நுழைவு முயற்சிவரை, மேல் நாட்டில் நடந்துகொண்டிருப்பதையும், நம் நாட்டில் நடக்கும் உபநிஷத்து உபன்யாசங்களையும், பஜனைக் கூச்சலையும் கவனித்தால், காந்தீயம் நம்மை வீட்டிலிருந்து காட்டிற்குக் கூப்பிடுவது விளங்கும். வாழ்க்கை வாழ்வதற்கே என்பதின் எதிர்ப்படையான தத்துவங்களையும் சித்தாந்தங்களையும் அடிப்படையாகக் கொண்டு மக்களைக் காட்டுமிராண்டிக் காலத்திற்கு இழுத்துச் செல்வதில் மின்சாரத்தினும் வேகமாக வேலை செய்கிறது காந்தீயம். அகிம்சை, உண்ணாவிரதம் போன்றவை காந்தீயச் சேற்றில் மிதக்கும் புழுக்களில் சில. இவை ஒவ்வொன்றாகக் கொல்லப்பட்டுவருவதைக் கண்கூடாகக் கண்டு கொண்டு வருகிறோம். காந்திப் பக்தர்களாலேயே காந்தீயம் அழிக்கப்பட்டு வருவதைப் பட்டேல் போன்றார்களின் "வாளுக்குவாள்" பேச்சுகளின்மூலம் அறிகிறோம். அறிவுக்கும் கருத்துக்கும் ஒவ்வாதது காந்தீயம் என்பதைக் காலங் காட்டிக்கொண்டு வருகிறது.

காந்தீயம் பித்தலாட்டமும் கேலிக்கூத்தும் நிறைந்தது, கடைப்பிடிக்க முடியாதது என்பதை மக்கள் வாழ்வின் பிரதான விஷயங்களுக்கு வரும் பொழுதுதான் தெரியமுடியும்.

காந்தீயக் கோட்டையை அறிவுக் குண்டுகளைக்கொண்டு எறிந்து தகர்த்து, நொறுக்கி, படுசூரணமாக்கும் வேலையில் சுயமரியாதை இயக்கத்தார் ஈடுபட்டுக் கொண்டதைப்போல, இந்திய உபகண்டத்திலேயே வேறுயாரும் தலையிட்டுக்கொண்டதில்லை. காந்தீய அழிவுக்கு மக்களின் மனசக்திதான் தேவையேயொழிய அணுச்சக்தி வந்தாலும் முடியாது.

முடிவாகக்காந்தீயம் என்றால், காட்டுமிராண்டிகாலத் தன்மை என்றுதான் பொருள்பட "கலைக் களஞ்சியத்தில்" குறிப்பிடவேண்டுமென்று கல்வி அமைச்சர் அவினாசியாருக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# இதுதான் அஹிம்சையா?

("ஊழியன்")

ஆதித்திராவிட மக்களுக்குப் படிப்பில்லை; பலமில்லை. சமூகத்தில் உயர்ந்தவர்களில்லை. அரசியல்அதிகாரமில்லை. ஆகையால் எப்பெயர் இட்டாலும் "என் இந்தப் பெயர் எங்களுக்கு" என்று கேட்க, கிட்டவும் நெருங்கார்; கிளர்ச்சியும் செய்யார்; செய்யவும் தெரியார் அடிமையால் ஏற்பட்ட அறிவின்மையால் என்ற துணிவு கொண்டு, ஆதித்திராவிட மக்களை "ஹரிஜன்" என்று அழைக்கிறார் "அஹிம்சா மூர்த்தி" காந்தியார்.

1932 லிருந்து காந்தியாரும், காங்கிரசாரும் பழங்குடி மக்களை "ஹரிஜன்" என்று சொல்லியும், எழுதியும் வருகிறார்கள். டாக்டர் அம்பேத்கார், திராவிட நாட்டின் தனிப்பெருந் தலைவரும், ஆதிதிராவிட மக்களின் அருந்தந்தையுமாகிய பெரியார் முதலிய தலைவர்களும், திராவிடர் இயக்கம், ஷெடியூல்டு வகுப்புக் கழகம், மற்றும் முன்னேற்ற நோக்கங் கொண்ட அறிஞர்களும், கழகங்களும் "ஹரிஜன்" என்னும் வார்த்தை ஷெடியூல்டு வகுப்பு மக்களை அவமானத்துக்கும், இழிவுக்கும், அடிமைக்கும் ஆளாக்குவதாகும் என்று கண்டித்து வருகிறார்கள். ஆனால் ஏதேச்சாதிகாரமான ஜாதித்திமிரே உருவாகவுள்ள ஆரிய—ஜாதி இந்துக்களின் தலைவர் காந்தியார் ஏழை மக்களின் கூப்பாட்டையும், அறிஞர்களின் அபிப்பிராயத்தையும் எப்படி சட்டைபண்ணுவார்? இந்தப் பதினைந்து ஆண்டுகளாகக் காந்தியாரும், காங்கரசாரும் ஆதித்திராவிட மக்களை "ஹரிஜன்" என்றே அழைத்து வருகிறார்கள். ஆனால் அரசாங்கத்தார் ஷெடியூல்டு வகுப்பு மக்கள் என்றுதான் கூறியும், எழுதியும் வந்தார்கள்.

ஆனால் இன்று காங்கரஸ் ஆட்சிபுரியும் இந்திய டொமினியனில், எல்லா மாகாணங்களிலும் ஷெடியூல்டு வகுப்பு மக்களை "ஹரிஜன்" என்று அரசாங்கத்தார் தாராளமாகக் கூறி வருகிறார்கள். மாகாண, மத்திய சட்டசபைகளிலும் "ஹரிஜன்" என்றுதான் அழைக்கப்படுகிறார்கள். சென்னை மாகாண சர்க்கார் "ஹரிஜன்" என்னும் பெயரை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு, ஹிந்துக்களெனக் கூறப்படும் ஷெடியூல்டு வகுப்பினர் இனிமேல் ஹரிஜன் என்றுதான் அழைக்கப்படுவார்கள், என்றும், கல்வி, உத்தியோகம் முதலிய காரியங்களில் ஷெடியூல்டு வகுப்புக்குப் பதிலாக "ஹரிஜன" என்றுதான் எழுத வேண்டுமென்றும் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

தன்மானமுள்ள ஆதிதிராவிட வாலிபர்களும், மாணவர்களும் உத்தியோகம், உபகாரச்சம்பளம் கோரிச் சர்க்காருக்கு மனுச் செய்யும் போது, எவ்வளவு மனக்கலக்கத்தோடு "ஹரிஜன்" என்னும் இந்த அருவெறுப்பான பெயரை உபயோகிப்பர்?

இதைப்பற்றி எழுதும் போது துக்கமாக இருக்கிறது; மனது வேதனையடைகிறது. காங்கரசாருக்கு மனிதாபிமானம், யோக்கியத் தன்மை, பரந்த நோக்கம், பொது மக்களின் அபிப்பிராயத்திற்குச் செவி சாய்க்க வேண்டுமென்ற சிறந்த கொள்கை, மக்களுக்கு மரியாதை காட்டவேண்டுமென்ற மாண்பு, ஏதாவது ஒன்று சிறிதாவது இருக்குமானால், பழந்தமிழ் மக்களை இவ்வளவு மோசமான முறையிலே இழிவு செய்வார்களா? தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்தப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் காங்கரசார், ஆதித்திராவிட மக்களுக்கு அருவெறுப்பானபெயரைச் சூட்டித்தான் தொண்டு செய்ய வேண்டுமா?

ஆதித்திராவிட மக்கள் ஆரியர் வரவால், இந்துமதத் திணிப்பால், சாதி

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

துக்களில் அனேக மாறுதல்கள் செய்ய வேண்டி இருந்தாலும், இப்போதைக்கு இந்தச் சிறு மாறுதலை அனுபவத்திற்குக் கொண்டு வரலாம் என்று கருதி, அந்தப் படியாகவே எழுத்துக்களை உபயோகித்து, அடுத்தாற்போல் பிரசுரிக்கப் போகும் "குடி அரசு" பத்திரிக்கையைப் பிரசுரிக்கலாம் என்று இருக்கிறோம்" என்று எழுதப்பட்டிருக்கின்றது.

இதை வாசகர்களும், மற்றும் தமிழ் பாஷை பத்திரிக்கைக்காரர்களும், தமிழ்ப் பண்டிதர்களும் ஆதரிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கிறோம்" என்று எழுதப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். (ஆ-ர்)

ஓ. எம். சுப்பிரமணியன்

# யார் கூறினாலென்ன?

## அலசிப்பார்ப்பீர் உண்மையை.

### ஆபத்தான சூழ்ச்சி

ஆச்சாரியார் கோஷ்டியினர் செய்யும் அட்டகாசங்களைப் பற்றித் தமிழருக்கு நன்றாகத் தெரியும். அந்தக் கோஷ்டி மந்திரி சபைக்குள் புகுந்து கொண்டு அதைக் கவிழ்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. முன்பு பிரகாசம் மந்திரி சபையைக் கவிழ்ப்பதற்கு என்ன பாடு பட்டார்கள் என்பது தமிழருக்குத் தெரியும். இது ஒருபுறமிருக்க,

ஆச்சாரியார் தலைமையைத் தமிழ் நாடு ஏற்க நேரிடுமானால் அதனால் ஏற்படும் மற்றொரு பலன் என்னவென்றால், தமிழ் நாட்டார் குடுமி வடநாட்டார் கையிலே வசமாகச் சிக்கிவிடும். இப்பொழுதே எடுத்ததற்கெல்லாம் மேலிடத்தை எதிர்பார்க்கும் நிலைமை இருந்து வருகிறது. அது மட்டுமின்றி வடநாட்டு முதலாளிகளுக்குத் தென்னாடு நல்லதோர் மார்க்கட்டாக மாறி வருகிறது. இந்த நிலைமையில் இங்கு ஆச்சாரியார் ஆட்சியும் ஏற்படுமானால், வடநாட்டுப் பிடி மேலும் மேலும் வலுப்படுமேயன்றிக் குறைய மார்க்கமில்லை. ஏனெனில் ஆச்சாரியார் காந்திஜியின் சம்மந்தி என்ற முறையிலும், அரசியலில் முக்கியஸ்தர் என்ற முறையிலும் வடநாட்டுடன் நெருங்கிய உறவு கொண்டிருக்கின்றார். அந்த உறவின் உதவியைக் கொண்டு தமிழ் நாட்டைப் பணியச் செய்வது ஆச்சாரியார் கோஷ்டிக்குச் சுலபம். அதிலும், இப்போதுள்ள நிலையில் தமிழர் பட்டேலிசத்துக்குப்பணிய வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

இப்படிக்கு
"தமிழ் மணி"

*　　*

### கூடிக் குடிகெடுப்போர்.

ஒற்றுமை என்று பேசி உறவாடும் போதே செல்லரிப்பது, கம்யூனிஸ்டுகளின் விசேஷ முறையாகும்.

*　　*

### நம்பிக்கைத் துரோகிகள்.

நம்பிக்கைத் துரோகத்தின் சின்னம்தான் இன்று தமிழ் நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட்டுக் கட்சி. சோஷலிஸ்ட்டுக் கட்சியின் பேரால் வசூலிக்கப்பட்டநிதியைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அச்சுக்கூடமும், பத்திரிகையுமே இன்று கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் முதலீடுகள்.

*　　*

### கோலைகாரர்கள்.

தங்கள் கட்சி தவிர, வேறு எந்தக் கட்சியையும் உழைப்பாளிகளின் ஸ்தாபனமாக எந்தக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியும் எங்கும் கருதுவதில்லை. மற்றக் கட்சியுடன் ஒத்துழைப்பதாகக் கூறி, அவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குலைப்பச் செய்வதே அவர்களின் கொள்கை. இதைச் செய்வதற்கு எவ்வழியைக் கையாளவும் அவர்கள் தயங்குவதில்லை.

இப்படிக்கு,
ஜனதா.

*　　*

### இப்பொழுதும் எதேச்சாதிகாரமே.

பிரிட்டிஷ் மேலாதிக்கம் மறைந்து ஐந்து மாதங்களாகி விட்டன. காங்கரஸ் மந்திரி சபை ஏற்பட்டு ஓராண்டிற்கு மேலாகிறது. ஆனாலும் கிராம மக்களிடத்திலேயும் அதிகாரிகளிடத்திலேயும் காலமாறுதலுக்கேற்ற புதிய மனோபாவம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் அஹிம்சை பேசிய அமைச்சர்களும், எதேச்சாதிகார வழியிலேயே ஆட்சி நடத்த முயலுகின்றனரே தவிரப், பொதுஜன ஆட்சிக்கான புதுவழியைப் புகுத்தக் கொஞ்சமும் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை.

*　　*

### பொதுமக்கள் அதிசயம்

நம் கட்சி ஊழியர்கள் போகும் கூட்டங்களுக்குத் தவறாது போலீஸ் ரிப்போர்ட்டர்கள் வந்து எழுதிச் செல்கின்றனர். அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. மதுரையில் டாக்டர் கே. பி. மேனன் பிரமாண்டமான பொதுக்கூட்டம் ஒன்றில் 2ம் தேதி பேசிக்கொண்டிருந்தபோது, கூட்டத்தின் நடுவில் நாற்காலி மேஜையைப் போட்டுக் கொண்டு ஸி. ஐ. டி. ரிப்போர்ட்டர் எழுதினார். ஏகாதிபத்திய ஆட்சியில் தேச பக்தர்கள் பேசிய காலத்தில் இந்த அருவெறுப்பான காட்சியைப் பொது மக்கள் கண்டு ஆத்திரமடைந்திருக்கின்றனர். தேசபக்தர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள், ஆட்சியில் இருக்கும் போதுகூட ஏன் இந்த மாதிரி நடைபெறுகிறது என்று அவர்கள் அதிசயப்படுகின்றனர்.

இப்படிக்கு
"இதுவும் அதுவே."

---

## திராவிடர் கழகத் தோழர்களுக்கு!

இம்மாத இறுதியோடு அங்கத்தினர் சேர்ப்பு வேலையை முடித்து ஜில்லாவாரியாக எண்ணிக்கையை வெளியிட வேண்டியிருத்தலால், அங்கத்தினர் பதிவுப் புத்தகங்கள் பெற்றுள்ள தோழர்கள் தாமதியாது உடனே முடித்து அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

ஆ. திராவிடமணி,
செயலர்,
மத்திய திராவிடர் கழகம்.
P. B. 325, சென்னை 2.

---

[6ம் பக்கத் தொடர்ச்சி]

உற்பத்தியால் பொருளிழந்து, வாழ்விழந்து, அழகு இழந்து, ஆண்மை இழந்து மாக்கள் நிலையில் இருக்கிறார்கள். பழங்குடி மக்கள் உணர்விழந்து, உரிமை இழந்து, உழைத்து உழைத்து எலும்பும் தோலுமாக ஆய்விட்டார்கள். ஆனால் இப்போது வைக்கம் வீரர் பெரியார் அவர்களின் தன்னலமற்ற தியாகத்தால், தூய சுயமரியாதை விளக்கு, சுடர் விட்டு எத்திக்கும் பிரகாசிக்கின்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் கண் விழித்துள்ளனர். தன்னுணர்வு பெற்று வருகின்றனர். ஜாதியாலும், மதத்தாலும் ஆதித்திராவிடமக்களுக்கு எற்பட்டுள்ள எண்ணற்ற இழிவுகள், பெரியார் அவர்களின் பெருந்தொண்டால் மறைந்து வருகின்றன.

ஆயினும் காந்தியாரின் சூழ்ச்சியால் காங்கரசாரும், ஜாதி இந்துக்களும், இந்தியாவில் நடக்கும் ஹிந்துக்களின் ஏகாதிபத்திய அரசாங்கங்களும், எட்டுக் கோடி ஷெடியூல்டு வகுப்பு மக்களை "ஹரிஜன்" என்று கூறுகிறார்கள். காங்கரசுக்குஅடிமையான சுயநலக்கூட்டம் தவிர, சமூகம் முழுவதுமே இப்பெயரை வெறுக்கிறது; கண்டிக்கிறது. அப்படி இருக்க காந்தியாரும், காங்கரசாரும் "ஹரிஜன்" என்று கூறுவது அஹிம்சைக்குப் பொருத்தமாகுமா?

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# குடி அரசு

20—12—47 சனிக்கிழமை.


## நியாயமான வேலைநிறுத்தம்!

★

இந்த மாதம் 15ந்தேதியிலிருந்து கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றார்கள் எனவும், வேலை நிறுத்தம் ஆரம்ப நாளைக் காட்டிலும் இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் வலுவடைந்தது எனவும், சர்க்காரின் பயமுறுத்தலான அறிக்கைக்குப் பிறகும் நடுவில் கலந்துகொண்ட சிலரின் பேச்சுக்குப் பிறகும் சிறிது வலுக்குறைந்திருக்கின்றதெனவும் பத்திரிகைச் செய்திகளில் காணப்படுகின்றன.

உணவுக் கட்டுப்பாட்டு முறையின் நிர்வாகக்கோளாறுகளினால், திராவிட நாட்டுக் கிராமங்கள் பல, இன்று பஞ்சத்தால் பிடிக்கப்பட்டுப் பதைபதைத்துக் கொண்டிருக்கும் வேளையில், அது நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் பரவிவிடுமோ என்று துடித்துக் கொண்டிருக்கிற இவ்வேளையிலும் கூட நம் மாகாண நிர்வாகஸ்தர்கள், தங்கள் புத்தியை வடநாட்டுப் பட்டேலிசத்துக்கு ஒத்தி வைத்து விட்டு இரவல் புத்தியைக் கொண்டே நிர்வாகம் புரிந்து கொண்டிருக்கிற இந்தக் காலத்தில், இப்பொழுது நடைபெற்று வரும் வேலை நிறுத்தத்தைக்குறித்து-சுமார் இலட்சம் பேரைக் கொண்ட ஸ்தாபனத்தில் பெரும்பாலோர் கலந்து கொண்டிருக்கும் இப்பெரிய குழப்பத்தைக் குறித்து—யாரும் அசட்டையாக இருந்துவிட முடியாது.

என். ஜி. ஓக்களின் சங்கத்தலைவர் தோழர் ஜகதீசய்யர், இப்போது நடக்கும் இந்த வேலை நிறுத்தத்திற்குக் கூறி வந்த காரணங்களை இங்கு குறிப்பிடுவோம்.

இந்த மாதம் ஆறாந்தேதி அடையாள வேலை நிறுத்தம், ஒரு மணி நேரம் மட்டும் என்று கூறி 70000 பேரைக் கொண்ட சென்னை மாகாண என். ஜி. ஓக்களின் சங்கமும் அச்சங்கத்தின் கிளை என்று மதிக்கத்தகுந்த சென்னை செக்ரட்டரியேட்டிலுள்ள சுமார் 1000 பேரைக் கொண்ட என். ஜி. ஓக்களின் சங்கமும் கலந்து ஈடுபட்ட காலத்தில், பிரித்தாளும்முறையைப்பின்பற்றிச் சென்னை அரசாங்கம், 100க்கு 1½ பேருள்ள செக்ரட்ரியேட் சங்கத்தை மட்டும் அழைத்துப்பேசி மாகாண என். ஜி. ஓக்களின் சங்கத்தை அவமானப்படுத்திவிட்டது ஒரு காரணமாகும்.

மத்திய அரசாங்கச் சிப்பந்திகளுக்கு (சென்னையில் இருப்பவர்களுக்கே) எவ்வளவு சம்பளம் தரப்படுகிறதோ அவ்வளவு சம்பளம் எங்களுக்குத் தரவேண்டும். ஏனென்றால் அவர்கள் பார்க்கின்ற வேலைகளுக்குக் குறைச்சலில்லாமலே நாங்களும் வேலை பார்த்து வருகின்றோம்; அவர்களுக்கு எந்த அளவு வேலைக்குத் தகுதியோ, அந்த அளவுக்கே எங்களின் தகுதியும் வரையறுக்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு வாழ்க்கைச் செலவு எவ்வளவு ஆகிறதோ அவ்வளவுதான் எங்களுக்கும் செலவு ஆகிறது. இதை உடனடியாகக்கவனியாது போனாலும், இதற்காக ஒரு மத்தியஸ்தக் கமிட்டியை நியமித்தாவது எங்களின் சம்பளத்தைப் பரிசீலனை செய்யச் சர்க்கார் உடனே ஒப்புக் கொள்ளவேண்டும்.

மத்திய அரசாங்கச் சிப்பந்திகளுக்குப் பஞ்சப்படி எவ்வளவு கொடுக்கப்படுகின்றதோ அந்த அளவு எங்களுக்கும் கொடுக்க வேண்டும். இதை உடனே செய்ய வேண்டும். என்ற இந்த இரண்டு கோரிக்கைகளையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது என்பது மற்றொரு காரணமாகும்.

என். ஜி. ஓக்களின் கோரிக்கைகள் நியாயமானவை என்பதும், அவர்களை அலட்சியப்படுத்தி அவமானப்படுத்தியது நிர்வாகப் பொறுப்பை உணராத பொறுப்பற்ற செயலே ஆகும் என்பதும் எவரும் சுலபத்தில் முடிவுகட்டக் கூடியவைகளே,

இங்கு என். ஜி. ஓக்களின் கோரிக்கையைச் சர்க்கார் ஒப்புக் கொள்ளாததற்குக்கூறும் காரணத்தைப் பார்ப்போம்.

மத்திய சர்க்காருக்கு வருமானம் அதிகம். ஆதலால் சிப்பந்திகளுக்கு அதிகமாகக் கொடுக்கிறார்கள். நமக்கு (மாகாண சர்க்காருக்கு) வருமானம் குறைவு. ஆதலால் இந்த அளவு கொடுக்கின்றோம். இதற்கு அதிகமாகக் கொடுக்க வேண்டுமானால் பொது மக்களுக்குத்தான் வரி அதிகமாகப் போடவேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால் கோரிக்கை தவறு என்றோ, தேவையில்லை என்றோ கூறவில்லை என்பதைப் பொதுமக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சர்க்காரின் இந்தப் போக்குக்கும், தொழிலாளி அதிகம் கூலி கேட்டால் அவனது கூலி உயர்வையும், தனது லாபப்பெருக்கையும் பண்டத்தின்மீது ஏற்றி, அடக்க விலைபோடும் தனிப்பட்ட முதலாளியின் போக்குக்கும் என்ன வித்தியாசம் கூறமுடியும்? இதிலிருந்து முதலாளித்துவ சர்க்கார் என்பதுதான் தெரிகிறதே தவிர வேறென்ன கூறமுடியும்?

என். ஜி. ஓக்களில் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பெரும்பாலோரின் தகுதியையும், சம்பளத்தையும், வாழ்க்கைச் செலவையும் இனிக் குறிப்பிடுவோம்.

சர்க்கார் காரியாலயங்களில் எஸ்.எஸ்.எஸ்.ஸி. படித்துவிட்டுச் சர்வீஸ் கமிஷன் பரீட்சையில் தேறியவர்களே குமஸ்தா வேலை செய்வதற்குத் தகுதியானவர்கள் என்றாலும் கூட, இக்குமஸ்தா வேலையில் பல பட்டதாரிகளும், கல்லூரியை விட்டு வந்தவர்களும் இன்று வேலையில் இருக்கின்றார்கள் என்பதையும், இக்கல்வியைப் பெறுவதற்குக் குறிப்பாக. ஏழைத் திராவிடர்கள் எத்தனை ஆயிரம் செலவு செய்திருக்க வேண்டும் என்பதையும், அதனால் எத்தனை திராவிடக் குடும்பங்கள் தன் வயிற்றையும் வாயையும் கட்டி பெருந்துன்பத்திற்காளாகிப் படிப்பதற்குப் பணம் அனுப்பிவந்திருக்கவேண்டுமென்பதையும், படிக்கும் போது ஏற்பட்ட பணச் செலவு, பட்டபாடு ஆகியவைகளுக்கும், இப்பொழுது அடைகின்ற வருமானத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்

## பொங்கல் பரிசு!

★

1. தத்துவ விளக்கம் (பெரியார்)
2. பாரதிதாசன் கவிதைகள் அல்லது பாண்டியன் பரிசு (பாரதிதாசன்)
3. கம்பரசம் } (சி. என். ஏ.)
4. ஆரிய மாயை } (சி. என். ஏ.)

நமது "குடி அரசு"ப் பத்திரிகைக்கு 1948ம் வருஷத்திற்கு 8 சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்குப்பொங்கல் நாளன்று (அதாவது 14-1-48உ) மேற்கண்ட புத்தகங்களைப் பரிசாக அனுப்பிவைக்க விரும்புகிறோம்.

மானேஜர்.

---

லை என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்பொழுதுகுமாஸ்தாக்களின் சம்பளம் 45. அலவன்ஸ் 18. ஆக ரூ. 63 ஐக் கொண்டு, விலை வாசிகள் ஒன்றுக்கு மூன்றாய் ஏறி விற்கும் காலத்தில் எப்படி ஒரு குமஸ்தாவின் குடும்பம் நாணயமான முறையில் நடைபெற முடியும் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

சர்க்கார் இந்த அளவைக் கொண்டு குமஸ்தாக்கள் திருப்திப் பட்டிருக்கவேண்டும் என்று எதிர்பார்த்தால் அதற்கு உண்மையில் என்ன அர்த்தம் இருக்க முடியும்? **எப்படி வேண்டுமானாலும் லஞ்சம் வாங்குங்கள். ஆனால் எங்களை மட்டும் அதிகச் சம்பளம் கேட்டு விடாதீர்கள் என்பது தானே அர்த்தம்**

கிராமாதிகாரிகளை எடுத்துக் கொள்ளுவோம். அவர்களின் சம்பளம் என்ன? அவர்களின் குடும்பச் செலவு எவ்வளவு? 20 ரூபாய் வருமானத்தைக் கொண்டு 200 ரூபாய் குடும்பச் செலவைச் சரிக்கட்டிவரும் பல கர்ணங்களை நாம் பார்த்து வருகின்றோம். இவர்கள் வேறு என்ன செய்வார்கள்? லஞ்சம் வாங்குவது மாபெரும் குற்றம். ஒப்புக்கொள்ளுவோம். அதை ஒழிக்க வேண்டுமென்று பேசப்படுகின்றது. ஒப்புக்கொள்ளுவோம். லஞ்சம் வாங்குவோர் பலமாகத் தண்டிக்கப்படவேண்டும். ஒப்புக்கொள்ளுவோம் ஆனால் லஞ்சம் ஒழிய வேண்டும் என்பதிலே இன்றைய மத்திய சர்க்காருக்கோ மாகாண சர்க்காருக்கோ எள்ளு மூக்கத்தனையாவது உண்மையிலே சிரத்தையிருக்கிறது என்று சொல்ல முடியுமா?

மாதம் 50 ரூபாய் நியாயமாய்ச் செலவு செய்யவேண்டிய கிராமாதிகாரிக்கு மாத வருமானம் 20 ரூபாய். 80 ரூபாய் செலவு செய்யும் நகரத்திலுள்ள குமாஸ்தாவுக்கு 60ரூபாய் வருமானம்என்றால், மிச்சத்திற்குக் கிராமாதிகாரிகளும்குமாஸ்தாக்களும்என்ன செய்வார்கள்? லஞ்சம்வாங்குகிறார்கள் என்று சொல்லிக்கொண்டிந்தால் மட்டும் போதுமா? கல்வி சொல்லிக்கொடுக்க முடியாத ஒரு பெற்றோர், தன் மகனுக்கு எழுதத் தெரியவில்லை என்று குறைகூறுவதற்கும் இந்தச் சர்க்கார் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று குறைகூறுவதற்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இப்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் லஞ்சம் வாங்கியவர்கள். இவர்கள் ஒழிக்கப்படவேண்டும் என்று தினசரிகளும் காமராஜர்களும் காரசாரமாகக் கூறிவருவது பொருந்துமா? இது அரசாங்க நிர்வாகஸ்தர்களின் நன்மைக்காகக் கூறப்படும் யோசனையா? அல்லது மக்களின் நன்மைக்காக கூறப்படும் யோசனையா? நிர்வாகிகளுக்கும் இதனால் நன்மையில்லை, மக்களுக்கும் நன்மையில்லை என்பதை நாம் இங்கு எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது.

குறைந்த சம்பளத்தைக் கொடுத்து லஞ்சம் வாங்கிப் பிழையுங்கள் என்று சர்க்கார் ஜாடையாக இருந்துவந்தும்கூட இந்த வேலை நிறுத்தம் ஏன் நடைபெறவேண்டும்? லஞ்சம் கொடுத்துக் காரியங்களைச் சாதித்துக்கொண்டு வருகின்றவர்கள் அல்லது சாதிப்பதற்குக் கையாட்களாய் முன் நிற்பவர்கள் கதர்ப் பேர்வழிகளே தவிர, மற்றவர்கள் லஞ்சம் கொடுத்தாலும் அதிகாரிகள் வாங்கிக்கொள்ளப் பயந்துகொண்டு மறுக்கின்றார்கள் என்பதையும், கதர்ப் பேர்வழிகள் சிறு அதிகாரிகளையும் குமாஸ்தாக்களையும்அணுகி லஞ்சம்கொடுப்பதில்லைஎன்பதையும், பெரிய அதிகாரிகளுக்குப் பெரிய அளவு லஞ்சம்கொடுத்தே காரியங்கள் நடைபெறுகின்றது என்பதையும், அதனாலேயே லஞ்சம் வாங்குவோரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதையும், அந்த லஞ்சம் கிடைக்காததினாலேயே இன்று வேலைநிறுத்தம் நடைபெறுகின்றது என்பதையும், சர்க்கார் நல்லமுறையில் எண்ணினால் தெளிவாகத் தெரியும் என்று சொல்ல ஆசைப்படுகின்றோம்.

என். ஜி. ஓக்களில் சிலர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லையென்றால், அவர்களுக்கு வருகின்ற வருமானம் அவர்களின் குடும்பத்திற்குப் போதுமானதாகவோ அல்லது குடும்பத்திலுள்ள மற்றவர்களால் வருமானம் வருகின்றது என்பதாகவோ இருக்கவேண்டும். அல்லது ஏற்கனவே லஞ்சம் வாங்கிச் சேமித்து வைத்திருப்பவர்களாகவோ, அல்லது இப்பொழுதும் இனியும் லஞ்சம் வாங்கலாம் என்ற நம்பிக்கையுடையவர்களாகவும் இருக்கவேண்டும் என்று கூறுவதைத் தவிர வேறு காரணம் இருக்கமுடியாதெனவும் கூற ஆசைப்படுகின்றோம்.

உணவுக் குறையினாலும் உடைக்குறையினாலும் திண்டாடிக் கொண்டிருக்கும் பொதுமக்கள் இந்தக் குழப்பமான நிலைமை நீடிக்க வேண்டும் என்பதை விரும்பமாட்டார்கள். இதற்காகப் புதிய வரிகள் போடுவதையும் விரும்பமாட்டார்கள். மக்கள் சர்க்கார் இந்த நிலைமையில் என்ன செய்யவேண்டும்? கோரிக்கை நியாயமற்றவை, தேவையில்லாமல் போட்டிக்காக அக்கிரமமாகக் கேட்கிறார்கள் என்று கூற முடியாத, மக்கள் சர்க்கார் உடனே என்ன செய்யவேண்டும்? முதலாளித்துவப் போக்கை ஒழித்துக்கொள்ளவேண்டும்என்று நாம் அழுத்தமாகக் கூற விரும்புகின்றோம்.

இன்றைய மந்திரிகள் முதலில் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளவேண்டும்.

மந்திரிகளின் அலவன்ஸ் உடனே குறைக்கப்படவேண்டும்.

அடுத்தபடி 200, 250 ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளம் எந்த அதிகாரிக்கும் எக்காரணம் பற்றியும் கொடுக்கக்கூடாது.

மக்களுக்குத்தேவையில்லாத, வீணான கதர்த் திட்டத்திற்குப் பல கோடிகளை ஒதுக்கி வைத்துச் செலவு செய்து வருவது உடனே நிறுத்தப்படவேண்டும்.

மக்கள் வெறுத்த இந்திக்காக, மக்களின் சொத்து செலவழிக்கப்படுவதை உடனே நிறுத்த வேண்டும்.

காங்கரஸ் காரர்களுக்கு வேலை கொடுத்து, நிரந்தரமான வருமானம் கொடுத்துவரவேண்டும் என்ற எண்ணத்தின்மீது ஏற்பட்டு வரும் புது ஆபீஸ்களை யெல்லாம், உதாரணமாக விளம்பர இலாக்காவின் பேரால் செய்துவரும் பயனற்ற வேலைகளையெல்லாம் உடனே விட்டொழிக்க வேண்டும்.

பஸ்களை ஏற்று நடத்துவது போல், தனிப்பட்டவர்களுக்கு லாபம் தரும் பற்பல துறைகளையும் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும். வெறும் வாடகைக்காரோட்டிப் பிழைக்கும் சர்க்காராக மட்டும் இருக்கக் கூடாது.

மக்களின் சொத்துக்களாக கோவிலில் மண்டிக்கிடக்கும் பெரும் பொருள்களை, சர்க்கார் சொத்தாகக் கொண்டு அவைகளை நாட்டில் நடமாடவிட வேண்டும்.

மாகாணத்திலிருந்து மத்திய சர்க்கார் அடையும் வருமானத்தைக் குறைக்கவேண்டும்.

ஒவ்வொரு தொழிலாளிக்கும் வாழ்க்கைச் செலவிற்குப் போதுமானதாக வருமானம் இருக்கிறதா? என்பதிலேயே சர்க்காருக்குக் கவனம் இருக்கவேண்டுமேதவிர, சிலரைக் "குரோட்டன்" செடிகளாகத்தான் வைத்திருக்க வேண்டுமென்ற வர்ணாச்சிரமத்தை விட்டொழித்துவிடவேண்டும்.

இந்த நேர்மையான போக்கை அரசாங்கம் மேற்கொள்ளாமல், ஆகஸ்ட்டுத் தியாகிகளுக்கும் அக்டோபர் வீரர்களுக்கும் வேலை கொடுப்பதற்கு இது ஒரு சந்தர்ப்பம் என்று எண்ணித், தண்டவாளங்களைப்பெயர்த்துத்தபாலாபீசுகளையும் பத்திர ஆபீசுகளையும் கொளுத்தியவர்களை அழைப்பார்களேயானால் நாட்டில் நாணயம் யோக்கியதை ஆகியவைகள், விலை என்ன என்று? கேட்கப்படக்கூடிய நிலைமைக்கு வந்துவிடுவது மட்டும் உறுதி.

இன்றைய என். ஜி. ஒக்களில் பார்ப்பனர்களே அதிகமென்பதும், இந்தச் சங்கத்தின் தலைவரான தோழர் ஜகதீசய்யர், அய்யர் என்பதும், இதற்கு முன்பு பிரகாசம் ஆட்சியில் வேலைநிறுத்தமெனப் பிரமாதமாகப் பேசிச் சமயத்தில் கைவிட்டவர் என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். இருந்தும்கூட என். ஜி. ஒக்களின் கோரிக்கை நியாயமாயும், அவசியம் உடனே பரிகாரம் செய்யப்பட வேண்டியதாயும், நாட்டில் ஓரளவாவது மக்கள் வாழ்க்கையில் அமைதியைக் காணக்கூடியதாயும் இருப்பதினாலேயே, இவ் வேலைநிறுத்தம்கடைசிவரை வெற்றிபெற முடியாதெனவும், வெற்றிபெற்றால் அது ஒரு அதிசயமான சங்கதி எனவும், எதிர்பார்த்தும் கூட நாம் இதை ஆதரிக்கின்றோம் என்பதையும், தலைவர் பெரியார் அவர்கள், இதை விளக்கித் திருவண்ணாமலை மாநாட்டிலும்; மற்றைய பொதுக்கூட்டங்களிலும் பேசி வருகின்றதை நாட்டு மக்கள் ஆதரித்து வருகின்றார்கள் என்பதையும், நாம் இங்கு எடுத்து வற்புறுத்திக் கூறுகின்றோம்.

இன்றைய மந்திரிசபையில் பிரதமர் ஓமாந்தூரார் ஆக இருப்பதால் இக் குழப்பத்தைப் பார்ப்பனீயம் தனக்குச்சாதகமாகவே பயன்படுத்தும். காலிகளையும் குண்டர்களையும் புதிதாக வேலைக் கமர்த்துவதால் உண்டாகக்கூடிய கேடுகளை நாளைக்குப் பெரிதாக சித்திரிக்க இருப்பதும் பார்ப்பனீயமே. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்குக்கெடுதல் உண்டாகும்என்றால், அங்கங்கே உள்ள பார்ப்பன மேலதிகாரிகளால் கூடுமானவரை பார்ப்பனர்களுக்குக் கெடுதல் இல்லாதபடி பார்த்துக்கொள்ளும் பார்ப்பனீயம். புதிதாக வேலைக் கெடுத்துக்கொள்ளுகின்றவர்களிலும், தன்னினம் முழுவதிற்கும் வேலை தேடிக்கொண்டுவிடும் பார்ப்பனீயம். ஆதலால் பார்ப்பனீய வலையில் விழுந்து, தன்னுடைய கள்ளமார்க்கட் கணக்கை காட்டாமல் மற்றவர்களின் லஞ்சக் கணக்கைக் காட்டவேண்டுமெனக் கூறிவரும் தினசரிப் பத்திரிகைகளின் ஆலோசனையைக் கொள்ளாமல், வேலை நிறுத்தம் செய்வோரோடு கண்ணியமான முடிவுக்கு வந்து, கூடுமான நியாயம் வழங்க முற்பட வேண்டும் எனவும், அதுதான் பொதுமக்களின் சஞ்சலத்தைக் குறைக்க வழியாகும் எனவும், யோக்கியதையான அரசாங்கத்திற்கு இதை உடனே விரைந்து செய்ய வேண்டியதுதான் முறை எனவும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மனைவி நிபந்தனைக்குக் கணவன் ஆட்சேபம்

### வழக்குத் தள்ளுபடி

கணவனுடன் சேர்ந்து குடும்ப வாழ்க்கை நடத்துவதை ஓர் ஸ்திரீ ஆட்சேபித்தாளாம். தன்னுடன் கணவன் சேர்ந்து வாழ கர்ப்பத்தடைக் கருவியை அணிந்து கொள்ள வேண்டுமென்று இவள் நிபந்தனை போட்டாளாம்.

இதன் பேரில் இவள் கணவர் பிரபுக்கள் சபையில் ஓர் வழக்குக் கொண்டு வந்தார். லார்டு சான்ஸ்லர் வைகௌன்ட் அவிபிட், தீர்ப்புக் கூறுகையில் இவ்வழக்கைத் தள்ளிவிட்டார். இத்தீர்ப்பைக் கண்டுகத்தோலிகரின்விவாகஆலோசனைக் கௌன்சில் வியப்படைந்திருக்கிறது.

மேற்படி கௌன்சிலின் சேர்மன் தோழர் கிரகாம் கிரீன் "ரியூட்டர்" நிருபரிடம் கூறியதாவது: கர்ப்பத்தடை கருவியை உபயோகிக்க வேண்டும் என்ற ஸ்திரீகளின் உரிமையை ஆதரித்துப் பிரபுக்கள் தீர்மானித்திருக்கின்றனர். ஆனால் நமது தத்துவங்கள் வேறு. ஆயிரக்கணக்கான ரப்பர் கருவிகள் மக்களுக்கு விற்கப்படுவதை அறி

## வருந்துகிறோம்.

காஞ்சீபுரம் குமரன் பிரஸ் சொந்தக்காரரும், காஞ்சி ஆயில் மில்ஸ் மனேஜிங் ஏஜண்டுமான தோழர் குப்புசாமி முதலியார் அவர்கள் 17-12-47 இரவு சென்னையில் உயிர் நீத்தார் என்ற துயரச் செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது குடும்பத்தாருக்கும் தோழர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபம் உரியது.

# — காவடி. —

(கே. பாலையா)

காவடி என்றவுடனே, முருகன் பக்திக்காரருக்குப்பழனியும்,பெருமாள் பக்திக்காரருக்குத் திருப்பதியும், அரசியல் தலைவர்களுக்கு டில்லியும்தான் நினைவிற்கு வரும்.

காவடி தோன்றிப் பல காலம் ஆகியும்கூட இப்பொழுதும்அதன் பெயர் மாத்திரம் பத்திரிகைகளில் அடிக்கடி வந்துகொண்டேதான் இருக்கின்றது. சென்னை மந்திரிகள் டில்லிக்குக் காவடி. காரியக் கமிட்டி மெம்பர்கள் முதல்மந்திரியிடம் காவடி. ஒரு காங்கரஸ்வாதி காமராஜரிடம் காவடி. இந்த மாதிரி அடிக்கடி காவடிச்சிந்து பாடப்படுகிறது. ஆனால் காவடி என்பது என்ன? எப்படி வந்தது? அதன் சரித்திரம் என்ன? என்பதைப்பற்றி இன்னும் பல பேருக்குத் தெரியவில்லையோ, அல்லது தெரிந்தும் சும்மா இருக்கின்றார்களோ தெரியவில்லை. என் சிற்றறிவிற்கு எட்டியமட்டும் இங்கு சிறிது விளக்க முயலுகின்றேன்.

வண்டிகளும், வண்டிகள் செல்வதற்கான பாதைகளும் இல்லாத பழங்காலத்தில், ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊரைக் கடக்கவேண்டுமானால் மக்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார்கள் என்று அறிகின்றோம். மேலும் அந்தக் காலங்களில், இந்தக்காலத்தில் காணப்படுவதைப்போல் ஊர்கள் எல்லாம் பக்கம் பக்கமாய் இருக்காதெனவும், பல காதங்களுக்கிடையேதான் ஊர்களைக் காண முடியும் எனவும், அவ்வாறு நெடுந் தூரமுள்ள ஊர்களுக்குப் போக வேண்டி இருந்தால்,காடுகள் மலைகள்மேடுகள்முதலியபலகஷ்டமான பாதைகளைக் கடக்கவேண்டுமெனவும், அதுவும் இரண்டுமூன்று நாள் பயணம், ஏழுநாள் பயணமாகக்கூட இருக்குமெனவும், அம்மாதிரி நெடுந்தொலைவுள்ள பிரயாணத்தைக் கடக்க வேண்டி இருந்தால், பிரயாணிக்குத் தண்ணீர், சாப்பாடு, படுக்கை முதலிய சகல வசதிகளும் வேண்டியிருக்குமாதலால், அம்மாதிரி சகல வசதிகளும் நிறைந்த பிரயாணவசதிதான் காவடி எனவும், காவடியின் மேல், கூரை இருக்கும் எனவும் அது மழை வெயில் இரண்டையும் தாங்கும் எனவும், காவடியின் இரு முனைகளிலும் ஒரு பக்கம் தண்ணீரும் மற்றொரு பக்கம் கட்டமுதும் இருக்குமெனவும், மற்றபடி பிரயாணி கடந்து செல்லும் தூரத்தைப் பொருத்தும், ஆள் பலத்தைப் பொருத்தும் வேண்டுமான பிரயாண வசதிக்கேற்ற சாமான்களோடு வழிநடப்பார்கள் எனவும், நாம் படித்த, பார்த்த, கேட்ட சங்கதிகளிலிருந்து முடிவு கட்டிக்கொள்ளலாம்.

'கா' என்றால் காடு. 'அடி' என்றால் நடை. காட்டைக் கடந்து செல்ல உபயோகமுள்ள சாதனத்துக்கு கா—அடி என்ற சொற்கள் காவடி என்று மாறுபட்டு வழங்குகின்றது என்று கூறலாம்.

காட்டுமிராண்டிக் காலத்து மனிதனால் உபயோகப்படுத்தப்பட்ட ஒரு பொருளை வைத்துக்கொண்டுதான், இந்த அணுக்குண்டு காலத்திலும் பழனிக்கும் திருப்பதிக்கும் காவடி தூக்குகிறார்கள். காவடியிலிருந்து உருமாறித் தேய்ந்த பொருளேதான், இன்று பல பெரிய மனிதர்கள் கையில் சதா குடிகொண்டிருக்கும் குடை என்பதையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

இந்தக் குடையைச் சைனாவிலோ ஜப்பானிலோதான் முதன் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்டது என்று, எப்பொழுதோ பத்திரிகையில் பார்த்ததாக என் நினைவு. அது தவறு என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆதிகாலத்தில் நாகரீகத்தோடு வாழ்ந்த திராவிடனால் கண்டு பிடிக்கப்பட்டு உபயோகப்படுத்தப் பட்டு வந்த குடைதான் காவடி. காவடிதான் குடை என்று உறுதியாகக் கூறலாம்.

இந்தக் காவடியின் மகத்துவம் நன்கு தெரியவேண்டுமானால் பாரதிதாசன் அவர்களின் கவிதையில் உள்ள காடு என்ற பகுதியில் வரும் "முட்புதர்கள்" என்ற சிந்தின் அடிகளைக் கவனப்படுத்திப் பாருங்கள்.

வழிநடைக் கஷ்டம் தெரியாமல் இருக்கும் பொருட்டுப் பிரயாணிகள் பாடிக்கொண்டு செல்வது தான் காவடிச்சிந்து என்பதும், அது இயற்கைச்சிந்து, காவடி மெட்டில் காட்டைப்பற்றியே வந்திருக்கின்றது என்பதும் நன்கு தெரியும்.

ஆகவே திராவிட நாகரீகத்தில் மிகப் பழமையானதும், இன்னும் மறையாமல் இருப்பதும், மடமைத் தனத்திற்கு உபயோகப் பட்டுக் கொண்டிருப்பதுமான காவடியின் பூர்வ கதை இவ்வளவு தான் என்று சொல்லி, என் காவடிச் சிந்தை இத்துடன் முடிக்கின்றேன்.

---

வோம். ஆனால் இதன் உபயோகம் உயிருக்கே அபாயமாகும். இவ்விதமிருந்தும் ஸ்திரீகள் தீட்டாகும் போது கர்ப்பத்தடை அனுசரித்தால் அதை கத்தோலிக் சர்ச் எதிர்க்காது.

---

# காகமும், குயிலும்.

(தே. மு. வேலன்)

"என்ன ஸார் எழுதுகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே நண்ப ஆனந்தம் உள்ளே வந்தார். "காகமும் குயிலும்' என்ற தலைப்பை படித்து விட்டுப் பெருமூச் சொன்று வெளிவர ஆச்சரியமும், அலுப்பு சேர்ந்த ஒரு பார்வையோடு, என்னை பார்த்து விட்டுச் சோபாவின் மீது சாய்ந்து கொண்டார். நண்பருக்கு என்ன நேர்ந்து விட்டதோ என்ற கவலையி னால் அவரை "என்ன ஸார் இதெல்லாம்?" என்று கேட்டேன்.

"என்ன டார்வின் கண்டிபிடிக்காத ஒரு தத்து வத்தை கண்டு பிடித்து விட்டீரோ" அல்லது "அகத்திய முனிவரது கமண்டலத் திருந்த காவிரி நீரைச் சிவ குமரன் காக்கையாகச் சென்று கவிழ்த்து விட்ட செய்தியோ?" அல்லது "இந்திரன் சிறுவன் காக்கை வடிவமாகச் சென்று சீதாபிராட்டியாரது திருமேனியைத் தீண்ட முயன்றதும், அப்பொழுது இராமபிரான் ஒரு புல்லைக் கிள்ளிக் காக்கை மீது எறிய, காக்கை சகல உலகமும் சுற்றி இராமபிரானையே சரண் புகுந்துவிட, இராமர் அவ்வஞ்சகக் காக்கையின் ஒரு கண்ணைப் பிடுங்க, அன்று முதல் காக்கைக் குலம் அனைத்திற்கும் இரு கண்ணுள் ஒரு மணியாயிற்றாம்" என்ற டார்வின் மூளைக்கு எட்டாத இராமாயண ஆராய்ச்சியோ? என்று அடுக்கடுக்காக அடுக்கிக்கொண்டே போனார்.

இது இராமாயண ஆராய்ச்சியும் அல்ல, அல்லது டார்வின் ஆராய்ச்சியும் அல்ல என்றேன்.

பின் ஏன் ஸார் இப்படி எல்லாம் பேர் கொடுத்துத்திணற வைக்கிறேள் என்றார்.

இதற்கு நான் என்ன பதில் சொல்லுவது? ஒன்று டார்வின் ஆராய்ச்சி,

அல்லது இராமாயண ஆராய்ச்சியாகத்தான் இருக்கவேண்டுமென்று அவர் நினைத்தார் போலும்.

பகுத்தறிவில்லாத காரணத்தாலோ, அல்லது பிரித்தறியக்கூடிய அறிவு இல்லாததாலோ என்னவோ, காக்கை தன் கூட்டிலுள்ள முட்டைகள் எல்லாவற்றையும் அடை காக்குமாம். பிறகு முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளி வந்த உடன்.........!

ஆ! ஆ! இதென்ன குயில் குஞ்சுகளும் இருக்கின்றனவே. 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது' என்று மனிதர்கள் பேசுவதைக் கேள்விபட்டிருக்கின்றேன். அது போலல்லவா நிகழ்ந்து விட்டது என்று வருத்தப்பட்டுத் தன் கூட்டிலுள்ள குயில் குஞ்சுகளை விரட்டியடிக்குமாம். இது காக்கையின் வாழ்க்கை வரலாற்றின் அனுபவம்.

'காக்கை உறவினரோடு உண்டு களிக்குமாம்'. ஏன் நாம் கூடத்தான் இந்த ரேஷன் காலத்திலும் நம் ரேஷனில் பஞ்சாபிலிருந்து வந்தவர்களுக்கும், மற்ற அகதிகளுக்கும் பிரித்துக் கொடுத்து விட்டுச் சாப்பிடுகிறோம். ஆனால் இன்று நம் சமுதாயத்தில் நடப்பதென்ன? நமது சமுதாயத்தில் பல குயில் முட்டைகள் இருக்கின்றன. அவைகளெல்லாம் வெளிவந்தவுடன் சுய உருவத்துடன் காட்சியளிக்கும். அதுவரையில் 'எல்லோரும் ஓர் குலம்' என்ற உயரிய கருத்துகளினால் அவைகளை அடை காத்து வருகின்றோம். எப்படியும் இன்று அல்லது நாளைக்குக் குஞ்சு வெளிவந்துதானே ஆகவேண்டும்! நாம் பல முட்டைகளை அடை காக்கின்றோம். குஞ்சுகள் வெளி வந்தவுடன் வேற்றுமையைக் காண்கின்றோம். ஆனால் ஆச்சரியப்படவில்லை. "இனாம் ஒழிப்பு மசோதா" வாதத்திற்கு வெளிவந்தவுடன் முட்டையின் ஓட்டை உடைத்துக் கொண்டு சுய ரூபத்துடன் காட்சியளிக்கும் குயில் கூட்டங்களையும், அவைகள் சட்டப் புத்தகத்தை வைத்துக்கொண்டு போடும் கூச்சல்களையும் கேட்கின்றோம். ஆனால் காகங்களைப் போல் நாம் அவைகளை விரட்டவில்லை, பகுத்தறிவுள்ள காரணத்தால் இன்றும் இந்தக் குயில்கள் 'இந்தியைக் கட்டாய பாடமாக்குதல்' போன்ற மசோதாக்களில் "தாங்கள் வேறு இனம்" என்று பளிச் சென்று காட்டும் குயில்களைப் போல் காட்சியளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இன்று நம்முடன் சேர்ந்து கொண்டு 'தமிழ் நாடு, தமிழ் வேண்டும்' என்று எழுதும் பத்திரிகைகள் என்ன ரூபத்துடன் முட்டையிலிருந்து வெளி வரப்போகின்றதோ? அவைகளும்குயில்களாகத்தான் காட்சியளிக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. உங்களுக்கு **எப்படி?**

---

# எமது தீர்ப்பு

## இலக்கியம்

(திங்கள் இருமுறை)
ஆசிரியர். சி. இலக்குவன்.
திருநெல்வேலி.

[புல்ஸ்கேப் 1/8 42 பக்கங்கள் தனி இதழ் 0-4-0 ஆண்டுக் கட்டணம் 4-0-0]

தமிழ் மக்களின் பழமைக்கும் பெருமைக்குமுரிய இலக்கியங்களை— தமிழ்ப் பொதுமக்களை நீண்ட நாளாக அச்சுறுத்திக் கொண்டு வந்த இலக்கியங்களை — தமிழ் மக்கள் சுவைக்க வேண்டும்; தமிழர் தம் தனி நாகரிகம், பண்பு முதலியவற்றை யுணர்ந்து இக்காலப் போலி மயக்கிலிருந்து விடுபட வேண்டும் என்ற சிறந்த நோக்கத்தோடு, இவ்விலக்கியம் தோன்றியிருக்க வேண்டும் என மலர் 14, 15. அறிவிக்கின்றது.

தாமரையில் தவழும் புலி, வில், கயல் அரசியல் கட்சியைத் தழுவியதா? என்பது இதிலிருந்து அறிய முடியவில்லை.

இலக்கியத்திற்கு அடிப்படையான மக்கள் வாழ்வு வளர, இலக்கியம் வளர்வதாக! என மனமுவந்து கூறுகின்றோம். திராவிடர்கள் — சிறப்பாகத் திராவிட மாணவர்கள் தவறாது படித்துப் பயனடைய வேண்டும்.

## பல்லவ நாடு.

(திங்கள் வெளியீடு)
ஆசிரியர் வ. செயச்சந்தரன்
74. பாதாள விக்னேசுவரர் கோவில் தெரு இராயபுரம், சென்னை.

[கிரவுன் 1/8 48 பக்கங்கள் இதழ் 0-4-0 ஆண்டுக்கு 3-0-0]

தமிழ் நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினரும், தமிழ் மொழி பேசும் மக்களில் நான்கில் ஒரு பகுதியினருமாகிய அரைக்கோடி வன்னிய மக்களின் சமுதாய நலன் கருதி, ஊராண்ட இனம் என்ற உரிமை ஒலி எழுப்பி, இன்று ஒடுக்கப் பட்டுவரும் நிலை ஒழிந்து, ஊராட்சியில் ஒப்பான பங்கு பெறத் தூண்டி வகுப்பின் ஒற்றுமையை வளர்த்து வரத் தோன்றியது.

"வன்னியர், குலப்பிரிவினையை வளர்ப்போர்" என்று திராவிடர் கழகத் தோழர்களில் சிலர் கூறுகின்றனர் என இதனுள் ஒரு கட்டுரையில் காணப்படும் தொடர் தவறுடையது என்று மட்டும் கூறுவோம்.

பல்வேறு வகுப்புகள், பல்வேறு நிலைகளில் இருந்து வரும் நிலைமை மறைய, ஒவ்வொரு வகுப்பும் முன்னேறி எல்லா வகுப்புகளும் ஒத்த ஒரு **நிலையை யடைந்தால் தான் வகுப்பு**

## வெள்ளையனே! வெளியேறாதே.

லார்டு மவுண்ட் பேட்டனின் கவர்னர் ஜெனரல் பதவியை 1948 மார்ச்சு 31ம் தேதியிலிருந்து அந்த வருஷக் கடைசி வரையிலாவது அல்லது இந்தியாவின் புதிய அரசியல் திட்டத்தின் கீழ் முதல் ஜனாதிபதி தேர்தல் நடக்கும் காலமாகிய 1949 வசந்த காலம் வரையிலாவது நீடிக்குமாறு பிரிட்டிஸ் சர்க்காரை இந்திய சர்க்கார் (காங்கரஸ்) கேட்டுக் கொண்டிருக்கிறார்களாம்.

இதற்குப் பெயர் வெள்ளையனே! வெளியேறு. என்பதா? வெள்ளைப் பிரபுவே! வெளியேறாதீர்கள் என்பதா?

---

வேறுபாடுகளும், வகுப்புகளும் ஒழிவது சாத்தியமாகும் என்ற உணர்ச்சியை இந்நாட்டில் தோற்றுவித்து வளர்த்த திராவிடர் கழகத்தின் கொள்கைக்கிணங்கத்தோன்றியிருப்பதே "பல்லவ நாடு" என நாம் எண்ணுகின்றோம், வன்னியர் சமூகத்தின் நலத்திற்கான பல கட்டுரைகளும். கதைகளும், பகிரங்கக் கடிதங்களும், மாநாடுகளில் பேசப்பட்ட பேச்சுகளும் காணப்படுகின்றன.

## வன்னிய முரசு.

[மாத வெளியீடு]
ஆசிரியை: பி. ஜி. பழநியம்மை.
6. அரிமுத்து ஆசாரி தெரு
சென்னை. 5.

[கிரவுன் 1/4. 8 பக்கங்கள் இதழ் 0-1-6 ஆண்டுக்கு 1-2-0]

ஐந்தில் ஒன்றான அரைக் கோடி வன்னியர் அடிமையான காரணத்தைக் கூறி, அடிமை ஒழிய ஆரியத்தின் கூட்டுறவை ஒழிக்க வேண்டுமென வழி கூறி, அவ்வழியைப் பின்பற்றி வன்னியர்களும் மனிதர்களாக வேண்டும் என்பதே தன் குறிக்கோள் எனக் கூறி வெளியாகியிருக்கும் மற்றொரு வன்னிய சமூக இதழ் இந்த வன்னிய முரசு.

மூடநம்பிக்கையைச் சிதறடிப்பதாயும், இன உணர்வை எழுப்ப வல்லதாயும், கட்டுரைகளும் கதைகளும் காணப்படுகின்றன. வன்னியர் மட்டுமேயல்லாமல் மற்றையத் திராவிடர்களும் படித்துப் பயனடையத் தக்கதாகும்.

கிடைக்கப் பெற்றோம்:—

**வெண்ணிலா.**
மாதமிருமுறை.
ஆசிரியர்: ப, சுந்தரவேலு.
இதழ் 0-1-0 ஆண்டுக்கு 1-8-0.
**புதுச்சேரி.**

நாடக விமர்சனம்:

# ★ முள்ளில் ரோஜா ★

★

பழமை மோகத்தில் மூழ்கிப் பொலிவிழந்து கிடக்கும் தமிழகத்துக்கு எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தம்வேண்டுமென சுயமரியாதை இயக்கம் பல்லாண்டுகளாய்ச் செய்து வந்த தீவிரப் பிரசாரத்தின் பயனாய்ப் புராண ஆபாசக் கண்காட்சிசாலையாய் விளங்கிவந்த தமிழ் நாடக மேடை இன்று புத்துணர்ச்சியூட்டும் புனிதக் காட்சிசாலையாய் மாறி வருகிறது. வசூலுக்காகவே புராண நாடகங்களை நடத்தி வருகிறோம் என்று சமாதானம் கூறி வந்த கம்பெனிக்காரர்களும் இன்று சமுதாய நாடகங்களை—அதிலும் புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட தீவிர சீர்திருத்த நாடகங்களைநடத்துவதும், அதனால் வசூல் பாதிக்கப்படாமல் அதிகரித்தே வருவதும் கண்கூடு. கோவையில் புதிதாக அழகாக வசதியுடன் கட்டப்பட்டுள்ள "ஷண்முகா தியேட்ட"ரில் இரண்டாவது வாரமாக நடைபெற்றுவரும் "முள்ளில் ரோஜா" என்ற நாடகம் இன்று நம் நாட்டில் நடைபெற்றுவரும் சில உயரிய சீர்திருத்த நாடகங்களுள் ஒன்றாக மதித்து எண்ணக்கூடியதாகும். தோழர் ப. நீலகண்டன் அவர்களால் எழுதப்பட்டு T. K. S. சகோதரர்களின் மதுரை ஸ்ரீ பால ஷண்முகானந்த சபையாரால் நடிக்கப்பட்டுவரும் இந்நாடகம் பெரிதும் பாராட்டக் கூடிய முறையில் அமைந்துள்ளது.

**கதை:** தாசி கமலத்தின் மகள் செல்லம் மங்கைப்பருவமடைகிறாள். அதாவது காமத்தேன் எங்கு கிடைக்கும் எனச் சுற்றியலையும் கருவண்டுகளைக் கவரும் வண்ணம் மலர்ச்சியடைகிறாள். தாய் கமலமும், "மாமா" நாராயணனும் தகுந்த கறவைப் பசுவைத் தெரிந்தெடுக்கிறார்கள். மில் முதலாளி ராகவ முதலியார் வலையில் வீழ்கிறார். முதலியாரோ எழுத்து வாசனையற்ற முரட்டுப் பணமூட்டை. விளம்பரப் பிரியர். தூணுக்குச் சேலை கட்டியிருந்தாலும் விரும்பக்கூடிய பரம ரசிகர். அவர் எல்லா நகைகளும் போட்டு 5000 ரூபாய் பணமும் கொடுத்துச் செல்லத்துக்கு "சாந்தி" செய்யஒத்துக் கொள்ளுகிறார். இதற்கிடையில் மிராசுதார் கந்தசாமிப் பிள்ளை மகன் ராமநாதன் நண்பர்களின் சகவாசதோஷத்தால் இளமையின்பம் நுகர தாசி வீடு செல்லத் துணிகிறான். சீர்திருத்தக் கருத்துக்களால் பண்பட்ட உள்ளம் படைத்த செல்லம் 'தாசி மகளும் தாசியாகத்தான் வாழ வேண்டுமா?' என்ற கேள்விக்கு நெடுங்காலமாய் விடை தாண முயன்று, தாசித்தொழிலை அறவே வெறுத்து, ஒருத்தி ஒருவனுடன் தான் வாழவேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறாள். ஆகவே கிழட்டு முதலியாருக்குப் பதில் முதல் ஆளாக இளைஞன் ராமநாதனை அனுப்பினால் அவள் தாசித்தொழிலுக்குச் சம்மதிப்பாள் என்று தவறாகத் திட்டமிட்ட நாராயணன் குறைந்த 'ரேட்'டில் ராமநாதனை முதல் நாள் மாப்பிள்ளையாக அழைக்கிறான். நடுங்கிய மனத்துடன் புதிய அனுபவம் பெற முதல் தடவையாக தாசி வீட்டுக்குள் நுழைந்த ராமநாதனைத் தனது உணர்ச்சி மிக்க பேச்சால் உளந்திருந்தச் செய்து விட்டாள் செல்லம். தாசியின் உயர்குணத்தை எண்ணி எண்ணி வியந்த ராமநாதன் அவளிடம் காதல் கொண்டு அவளையே மணப்பதாக உறுதி பூண்டு கடிதம் எழுதி விட்டான். ஒருவனையே நாடியிருந்த செல்லமும் காதல் வயப்பட்டாள். சந்திப்புகள் தவறாமல் நடந்த வண்ணமிருந்தன. இடையிடையே பணபலத்தால் எதையும் சாதிக்கலாம் என இறுமாந்திருந்த முதலியார் செல்லத்திடம் சரசமாட வந்து நல்ல 'உதை' வாங்கிச் செல்கிறார். ராமநாதனுக்குப் பெண் தேடுகின்றனர் பெற்றோர். ஒருநாள் உளந்திறந்து தான் ஒரு தாசி மகளை (தாசியையல்ல?) மணக்கப்போவதாகக் கூறி தந்தையின் கடுங்கோபத்துக்கு ஆளாகிறான் ராமநாதன். ஓரிரவு எப்படியாவது தன்னைக் கற்பழிக்க முதலியார் வருவதாகவும், காப்பாற்ற வேண்டுமெனவும் ராமநாதனுக்கு அறிவித்தாள் செல்லம். அதே நேரத்தில் தன் நண்பன் கிருஷ்ண மூர்த்தியுடன் அவளைக்காக்கப்புறப்பட்ட ராமநாதன் தந்தையின் குறுக்கீட்டால் தடைப்படுத்தப்படுகிறான். முதலியாருக்கு மயக்கத்தை யளித்து விட்டு இனி வீட்டிலிருந்தால் ஆபத்தென்றெண்ணிய செல்லம் வெளியேறி ராமநாதன் வீட்டையடைகிறாள். தந்தையால் வீட்டை விட்டுத் துரத்தப்பட்ட ராமநாதன் தன் நண்பன் வீட்டில் தங்கியிருக்கிறான். தாய் சமாதானம்கூறி அழைத்து வருகிறாள். இதற்குள் ராமநாதன் தந்தை கந்தசாமிப் பிள்ளையிடம்தங்கள் உண்மைக்காதலைப்பற்றிக்கூறுகிறாள்செல்லம். தேவடியாளுக்கு அவ்வளவு திமிராவென்று திட்டி, தந்தைக்கும் மகனுக்கும் விரோதத்தை உண்டாக்கிய குற்றத்திற்கு அவளை ஆளாக்கி விரட்டுகிறார் மிராசுதார். மனமுடைந்த செல்லம் தந்தைக்கும் மகனுக்கும் குறுக்கே தான் நிற்க விரும்பாததால் கந்தசாமிப் பிள்ளைக்குக் கடிதம் எழுதிவிட்டுத் தண்ணீரில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளுகிறாள். மூடச்சமுதாயம் செய்த சதியால் முன்னேற்றக் கருத்துடைய இருவரின் வாழ்வு முறிந்தது.

'பெண்களால்தான் பெண்ணடிமை தீரும் அவர்களே முயன்றால்தான் முடியும். பூனைகளால் எலிகளுக்கு விடுதலை கிடைப்பது எப்படி முடியாதோ அதுபோலதான் ஆண்களால்பெண்களுக்கும் உயர்வு கிடைக்குமென்று நம்புவதும்' என்று பெரியார் அவர்கள் உறுதியாகக் கூறிவரும் கருத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது இக்கதை. பணமூட்டைகளின் காமப்பசியைத் தீர்ப்பதற்காகவே ஒரு சமூகம் கடவுள் பேரால் பொட்டுக் கட்டிக் கொண்டு வாழ்வதும், அதற்கு இந்து சாஸ்திரங்களும் சட்டங்களும் இடமளித்துஆதரிப்பதும் இந்த அமைப்பை மாற்ற முயல்வோர் சமூக நிந்தனைக்கு ஆளாவதும் ஆகிய இன்றைய நமது சமூகக்கோளாறே கதையின் சுருங்கிய கருத்தாகும். இந்த அமைப்பைவெறுத்து மாற்ற எண்ணிய, அதே குலத்தில் பிறந்த ஒரு வீராங்கனை தன் முயற்சிக்குத் துணையாக ஒரு மனோதிட மில்லாத ஆடவனை நம்பியதால் இறுதியில் தன்உயிரையே தியாகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை யடைவதாக முடியும் இக்கதையின் கருத்து, தாழ்ந்து கிடக்கும் தமிழர் சமுதாயம் உணர்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

கதை நல்ல விறுவிறுப்புடனும், உணர்ச்சியூட்டுவதாகவும், கொண்டுள்ள ஒரே சீர்திருத்தக்கருத்தைப் பன்முறையும் வலியுறுத்திக் கூறும் முறையிலும், கதாநாயகர் இருவரையும் மையமாகக் கொண்டு வட்டமிட்டு வரும் வகையிலும் அமைந்திருப்பது போற்றக்கூடியதே. இம்மாதிரியான புரட்சிக் கருத்துக்களைக் கொண்ட நாடகங்கள் பல நாட்டில் நடக்க ஆரம்பித்து விட்டால், நாடு வெகுவிரைவில் முன்னேறும் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

**வசனம்:** பாமரருக்கும் விளங்கும் வண்ணம் சாதாரண எளிய நடையில் வசனம் அழகாக அமைந்துள்ளது. நாடகத்தின் முற்பகுதியிலும் வைத்தியர் வரும் காட்சிகளிலும் அனாவசியமான பல இடங்கள் உள்ளன. எனினும் தாசிமகள் செல்லம் பேசுகின்ற ஒவ்வொரு சொல்லும் நல்ல பொருட்செறிவும், கருத்து நிறைவும் உணர்ச்சி வேகமும் வாய்ந்து அழகாக விளங்குகின்றது, கந்தசாமிப் பிள்ளையின் உரையாடல் மூலம் போலிச் சீர்திருத்தவாதிகளின் சாயம் வெளுக்கிறது.

தாசி கமலம் "நாம்மட்டுந்தானா தேவடியாள்கள். தேவலோகத்தில் ரம்பை, மேனகை முதலிய பல்லாயிரக் கணக்கான தேவடியாள்கள் இல்லையா?" என்பதும்,

"மாமா நாராணனன்" தாசி நாட்டியமாட வெட்கப் படுகிறாயே! இந்தக் காலத்தில் உத்தியோகஸ்தர் வீட்டுப் பெண்களெல்லாம் நடிக்குப் போட்டி

யாக இத்தொழிலில் இறங்கி விட்டார்கள்!'' என்பதும்,

தாசிமகள் செல்லம் ''ஏராளமான மனைவிகளையும், கோபிகைகளையும் வைத்துக் கொண்டு கூத்தடிக்கும் கடவுள்கள் என்னைப் போன்ற ஏழைப் பெண்களின் இன்னலை எப்படிப் போக்குவார்கள்?'' என்பதும்,

முதலாளி முதலியார் ''என்னுடைய மில் விளம்பரத்தின் மேலே ''ஜெய் ஹிந்த்', 'வந்தேமாதரம்', 'நேத்தாஜிக்கு ஜே!' என்று போட மறந்துவிட வேண்டாம். அதுதான் இந்தக்காலத்திற்குத் என்பதும்,

தேசபக்தர் - கிருஷ்ணமூர்த்தி ''கதராடைக்குத்தான் இந்தக்காலத்தில் மதிப்பு. அதனால்தான் நானும் என் மனைவியுமாக அதை உடுத்துகிறோம் என்பதும்,

மிராசுதார் கந்தசாமிப் பிள்ளை ''மேடையில் சீர்திருத்தப் பிரசங்கம் செய்தால் வீட்டிலும் அப்படியே செய்து காட்டவேண்டுமோ? ஊருக்குத்தான் உபதேசம்; நமக்கு எதற்கு?'' என்பதும்,

இம்மாதிரியான பல கட்டங்களில் நாட்டின் நடப்பு நன்கு படம்பிடித்துக் காட்டப்படுகிறது.

**பாட்டு**: தேவையான அளவு பாட்டுகள் நல்ல முறையில் இருக்கின்றன. ''பெண்களால் முன்னேறக் கூடும்'' என்ற பாரதி தாசன் பாட்டும், ''மோகத்தைக் கொன்றுவிடு'' என்ற பாரதியார் பாட்டும், ''உலக வாழ்வு முள்ளில் ரோஜா'' என்ற பாட்டும் தக்க சந்தர்ப்பத்தில் இனிமையாகப் பாடப்படுகின்றன. சோகக்கட்டங்களில் பாடுவது தவறு என்ற இக்காலத்திய எண்ணத்துக்கு மாறாக, தாசிமகள் செல்லம் இரண்டு பாட்டுகள் பாடுகிறாள். இது பொருத்தமாக இல்லை. வேறொரு கட்டத்தில் வருவது போல் பின்னணியில் (Play-back) அமைந்திருக்கலாம்.

**நடிப்பு**: தாசிமகள் செல்லமாக நடிக்கும் தோழியர் திரௌபதி, தனது அற்புதமான நடிப்பின் மூலம் நமது நன்மதிப்புக்குப் பாத்திரமாகிறார். நடிப்பில் முதலிடத்தையும் பெறுகிறார். தோழர் டி. கே. ஷண்முகம் ராமநாதனாக நடிக்கிறார். தாசி வீட்டுக்கு முதல் தடவை செல்லும் கட்டத்திலிருந்து அவருடைய அபாரமான நடிப்புத் திறன் வெளியாகிறது. நாராயணனாக நடிக்கும் தோழர் ராமசாமி இயற்கை நகைச்சுவையின் மூலம் நமக்கு இன்பமூட்டுகிறார். முதலாளி முதலியாராக நடிக்கும் தோழர் சிவதாணு, இந்த நாடகத்தில் ஏனோ பல இடங்களில் அளவுக்கு மீறி நடித்து (over action) அருவருக்கத்தக்க முறையில் நடந்துகொள்ளுகிறார். தாசி கமலமாக நடிக்கும் தோழர், மிராசுதார் கந்தசாமிப் பிள்ளையாக நடிக்கும் தோழர் வெங்கடாசலம், கிருஷ்ண மூர்த்தியாக நடிக்கும் தோழர் பகவதி ஆகியோர் பாத்திரத்திற்கேற்ற அளவோடு அழகாக நடிக்கின்றனர். கந்தசாமிப் பிள்ளையின் மனைவியாக நடிப்பவருக்கு வேஷப்பொருத்தமில்லை. வைத்தியராக வருபவர் வராமலேயிருந்து விடலாம்.

**காட்சி அமைப்பு**: பின்னணிப்படுதாக்கள் எழிலுடன் பொருத்தமாகவும் அமைந்துள்ளன. செல்லம் கனவு காண்பதாகவும், ஆற்றில் விழுவதாகவும் காட்டப்படும் நிழற்காட்சிகள் அற்புதம். செல்லம் மங்கைப்பருவமடைந்ததை மொக்கு மலர்வதன் மூலமும் அவள் வாழ்வு இடர் நிறைந்திருப்பதை முள் நிறைந்த ரோஜா மூலமும் காட்டுவது சிறப்பாக உள்ளது. செல்லம் எழுதிய கடிதத்தைக் கந்தசாமிப் பிள்ளை படிக்கும் பாவனையில் அவளே உள்ளிருந்து பேசுவது உணர்ச்சி தருகிறது.

மற்றும் பின்னணி இசை முதலியன அளவோடு பொருத்தமாகவும் அமைந்துள்ளன. கதையின் முடிவு தான் பொருத்தமாகத்தோன்றவில்லை. சோகரச முடிவுகளை (Tragedy) நல்லதெனினும் கதை போகும் போக்குக்கு இனிய முடிவுடன் (Comedy) அமைத்தல் சிறப்பாக இருக்கும்.

எனினும் சமுதாயப்புரட்சிக்குத்தயாராகவேண்டிய தமிழர் சமுதாயம் கண்டிப்பாகப் பார்த்து ரசிப்பதோடு மட்டுமின்று. உணர்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு நாடகமே ''முள்ளில் ரோஜா.''

— எஸ். கருணானந்தம்.

[2ம் பக்கத் தொடர்ச்சி]

யாடியது. விளக்கைத் தொட்டுவிடாதபடி விருந்தாளி கவனித்துக் கொண்டார். என்றாலும் சிறிது நேரத்தில் அலற ஆரம்பித்துவிட்டான். அவர் திகைத்துவிட்டார். சமாதானப் படுத்தப் பெரும்பாடுபட்டார். திடீரென்று குழந்தையையும் அறையையும் சுற்றிப் பார்த்தார். பிறகு என்னமோ செய்தார். குழந்தை இருந்த இடத்தில்தான் இருந்தது. ஆனால் அழவே இல்லை. அவர் விஷயம் புரிந்து கொண்டதுபோல் குதூகலத்துடன் காணப்பட்டார்.

அன்றிரவு வழக்கம்போல் குழந்தை தொட்டிலில் படுத்துறங்கியது. நள்ளிரவில் விழித்துக்கொண்டலறினான். சாயங்காலம் அலறியதைவிடப் பன்மடங்கு பெரிதாக அலறியதைக்கேட்டு விட்டார் விருந்தாளி. எழுந்து அறைக்குள் ஓடினார். பெற்றோரும் உற்றாரும் வந்து குழுமிவிட்டனர். குழந்தை அலறுவதையும், சுற்றியுள்ள அறையின் அமைப்பையும் கவனித்தார். குழந்தையின் கண்ணைக் கவனித்தார். அவருடைய முகத்தில் புன்னகை தவழ்ந்தது. தொட்டிலின் கீழே வைத்திருந்த விளக்கைக் கையில் எடுத்தார். குழந்தையின் முன்னால் காண்பித்தார். அழுதபிள்ளை சிரித்தது. இதைத்தான் அவர் சாயுங்காலமும் செய்தார், குழந்தைக்கு எதிரில் சுவரிலே சற்று உயரமாக மாட்டினார். குழந்தை மீண்டும் உறங்கியது. குழந்தையின் அலறலை நிறுத்தவே கால்மணி ஆகுமே. இவர் அரை நிமிஷத்தில் நிறுத்தி விட்டாரே என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். சற்று நேரத்தில் குழந்தை விழித்து அழுதது; அலறவில்லை. பசித்தது போலும். பால் கொடுத்ததும் உறங்கி விட்டது. நிம்மதியான இந்த வாழ்வைத் திரும்பிப் பெற எவ்வளவு பணம் செலவழித்தோம். அது பயன் தரவில்லை. ஆனால் இன்று திரும்பப் பெற்றுவிட்டோம் என்று பெற்றோர் பூரித்தனர். குழந்தை அழுகாத காரணத்தை ஆவலோடு கேட்டனர். அச்சமயம் பேச்சுச் சத்தம் கேட்டுக் குழந்தை விழித்தது. இதோ பாருங்கள் மீண்டும் அலறவைக்கிறேன் என்று கூறி விளக்கைச் சுவரிலிருந்து எடுத்துத் தொட்டிலுக்குக் கீழே வைத்தார். குழந்தை வீறிட்டழுதது. எல்லோரும் விளக்குமாட்டியிருந்த சுவரைப் பார்த்தனர். அதில் ஒரு பெரிய தொட்டிலில் பெரிய குழந்தை படுத்திருக்கும் நிழல் தெரிந்தது. தினம் அதைப்பார்த்த அவர்கள், அன்றுதான் புதிதாகப் பார்ப்பது போல் கவனித்தனர். அவர்கள் காரணத்தைக் கண்டு பிடித்து விட்டனர். விளக்கை மீண்டும் சுவரில் மாட்டி விட்டு ''நிழலைக் காட்டிக் குழந்தையைப் பயமுறுத்தியதுண்டாம்மா?'' என்று சிரித்துக் கொண்டே பொன்னம்மாளைக் கேட்டார்.

''ஆமாம். குழந்தை பிடிவாதம் செய்து தொந்தரவு கொடுக்கும்போது நிழலைக் காட்டிப் பூச்சாண்டி, உன்னைப் பிடிச்சுக்கும், கடிக்கும் என்று பயமுறுத்துவேன்'' என்றாள். ''குழந்தைகளைப் பயமுறுத்தி வளர்க்கக் கூடாதம்மா. நீங்கள் நிழலைக் காட்டிப் பயமுறுத்தியதால் தான், இந்த நிழலைச்சுவரில் பார்க்கும் பொழுதெல்லாம் அவன் பயந்து அலறினான். இதுபோலவே சிலர், ஐந்து கண்ணன் வருவான், பிசாசு வரும் என்று பொய் கூறுவதால், அக்குழந்தை பிற்காலத்தில் எவ்வளவோ கஷ்டப்படுகிறது. அப்படி வளர்க்கப்பட்ட பிள்ளைகள் வயது வந்த போதும்கூட, பேய் பிசாசுகள் இருப்பதாக நினைத்துக் கொண்டு, பட்டணங்களில்கூடத் தனி வழி நடக்கப் பயப்படுகிறார்கள். நம் தொல்லையைப் போக்கக்கூறும் பொய், குழந்தைகளின் தைரியத்தையும் வீரத்தையும், தன்னம்பிக்கையையும் அழித்து விடுகிறது. பாம்புக்குக் கூடப் பயப்படாத பிள்ளைகளை, நிழலையும் அழுக்கு வேட்டிக்காரர்களையும் கண்டு பயப்படும்படி செய்வது ரொம்பத் தப்பான காரியம். ''ஐயா நீங்கள் யார் மந்திரவாதியா? என்று ஒருவர் கேட்டார், ''இல்லை, நான்

ரோஜா முத்தையா

# சீனா தேசத்தின் இன்றைய போராட்டம்.

[மயிலை சீனி வேங்கடசாமி]

சீனா தேசம் இப்போது உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருக்கிறது. இந்தப் போர் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நடந்து வருகிறது அந்த நாட்டிலே இரண்டுவிதக் கருத்துக்கள் இருக்கின்றன. இவ்விரண்டுவிதக் கொள்கைக்காரரும் போராடி வருகின்றனர். இவர்களில் ஒரு சாரார் சுயநலம் படைத்த பிற்போக்காளர். இவர்கள் சிறு தொகையினர். ஆனால், அதிகாரமும் பலமும் உடையவர். இவர்கள் நிலபுலங்களையுடைய முதலாளிகளும் பணக்காரர்களும், உத்தியோகஸ்தர்களில் சிலரும் ஆவர். இந்தப் பிற்போக்காளர்கள் தங்களுக்குச் சாதகமாக, உளுத்துப்போன பழைய கன்பூசியஸ் கொள்கையை ஆதாரம் காட்டுகின்றனர். இந்தப் பிற்போக்கினர்களுக்குத் தலைவராக இருப்பவர் சியாங்-கெ-ஷேக் என்பவர். இவர் கையில்தான் அரசாங்கமும் அதிகாரமும் இப்போது இருக்கிறது.

இந்தக் கட்சிக்கு எதிர்க்கட்சியாக இருப்பது ஜனநாயகக்கட்சி. இக்கட்சி முற்போக்குக் கொள்கையுடையது. பெருவாரியான பாமரப் பொது மக்களுக்காகவும் தேசத்தின் உயர்வுக்காகவும் இந்த முற்போக்குக் கட்சி பாடுபடுகிறது. இதில், மாணவர்களும், சிறு வியாபாரிகளும், இராணுவத்தில் ஊழியம் செய்கிற இளைஞர்களும், பள்ளியாசிரியர்களும் சேர்ந்துள்ளனர். "குலோமிங்டாங்" என்னும் அரசியல் சபையைச் சேர்ந்தவர்களில் சிலர்முற்போக்குக் கட்சியைச் சேர்ந்தவர். முற்போக்காளரானஜனநாயகக் கட்சியினர் கூறுவது என்னவென்றால்:- காலங்கண்ட உளுத்துப் போன கன்பூசியஸ் கொள்கை உதவாது. அது சிறு கூட்டத்தினரான பணக்காரர்களுக்குச் சௌகரியம்உள்ளதாய்ப்பெருவாரியான ஜன சமூகத்தைத் தாழ்த்தி,இழிவுபடுத்தி அடக்கி வைக்க உதவுகிறது. நாட்டை எழ்மைக் குள்ளாக்கி, முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்கிறது. ஆகவே அந்த முறையை ஒழித்து நல்ல ஜனநாயக முறையை ஏற்படுத்தவேண்டும் என்கின்றனர்.

பழமை விரும்பிகளாகிய பிற்போக்காளர் கையில் அதிகாரமும் அரசாட்சியும் இருப்பதினாலே, இவர்கள் முற்போக்கினரான ஜனநாயகக் கட்சியினரை அடக்கி ஒடுக்கியும், சிறையில் அடைத்தும், நாடு கடத்தியும், சிலரைக் கொலை செய்தும் வருகிறார்கள். இவ்வாறு கொடுமையாக அடக்கினாலும் ஜனநாயகக் கட்சி மேன்மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது.

இப்போது, பொது மக்களின் முற்போக்குக் கட்சியை அடக்க அரசாங்கத்தார் புது முறையைக் கையாண்டு வருகிறார்கள். "சீனாவின் தலை விதி" என்று பெயர் உள்ள ஒரு நூலை சியாங் கே ஷேக் அவர்கள் சீனபாஷையில் எழுதியிருக்கின்றார். இதை இலட்சக்கணக்காக அச்சிட்டுச்சீன நாட்டுப் பாடசாலைகளில் மாணவர்களுக்குக் கட்டாயப் பாடமாகப் போதித்து வருகிறார். இந்த நூல் இப்போது ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. (China's desting by Chiang - kai - Shek) இந்த நூலில் உளுத்துப்போனபழைய கன்பூசியஸ்கொள்கையை வற்புறுத்தியிருக்கிறார்.

கன்பூசியஸ் கொள்கை என்பது தற்காலத்துக்கு ஏற்றது அல்ல. இந்தக் கொள்கைப்படி கோடானுகோடி ஏழை மக்கள், ஒரு சில பணக்காரர்கள் அதிகாரிகள் ஆகியவர்களின் காலின் கீழ் நசுக்குண்டு, புழுபூச்சிகளைப் போல இருக்க வேண்டும். செத்துப்போனவர்களையும் மூதாதைகளையும் வணங்க வேண்டும். நாட்டின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாக இருப்பது இக்கொள்கை. பாமர மக்களுக்கு மரியாதை செய்யக்கூடாது என்றும், எஜமானர்கள் குற்றம் செய்தாலும் தண்டனை கூடாது என்றும் இது கூறுகிறது. கன்பூசியஸ் கொள்கையைப் பிற்காலத்தில் மென்ஸியஸ் என்பவர் பிரசாரம் செய்தார். "பாமரமக்களை ஆட்சி செய்வதற்குப் பிரபுக்களைத் தவிர ஒருவரும்இலர்;பிரபுக்களுக்குச்சாப்பாடு கொடுக்கப் பாமரமக்களைத் தவிர ஒருவரும் இலர்" என்பது கன்பூசியஸ், மென்ஸியஸ் கொள்கையாகும். இந்த அழுகிப்போன சட்டம் தமக்குச் சாதகமாக இருப்பதினாலே பிற்போக்கான பணக்காரக் கூட்டம், இதனையே சீனநாட்டின் சட்டம் என்று கூறி இதை நிலைநாட்ட முயற்சி செய்கிறது. இந்தப் பிற்போக்குக் கட்சி, நாட்டின் கைத்தொழில், விவசாயம், தொழிற்சாலை, வியாபாரம் முதலியவற்றைப் பெருக்குவதற்கு வழி செய்வதில்லை. தங்கள் சுயநலத்துக்கு எது எது தேவையோ அவற்றையே தேசத்தின் தேவை என்று கூறுகிறார்கள். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் இந்த அழுகிப்போன கொள்கையையே போதித்து வருகிறார்கள். இந்தக் கொள்கைக்கு மாறுபட்ட கருத்துள்ளவர்களை "குலோமிங்டாங்" அரசியல் சபையின் இரகசியப் போலீஸ் படை வேவு பார்த்து வருகிறது. கல்வி மந்திரியின் இந்த உத்தரவிற்குக் கீழ்ப்படியாதவர்களும், மாறுபட்ட கருத்துள்ளவர்களும் இரகசியப் போலீசாரால் வேவு பார்க்கப்பட்டுக்கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்கள். மாறுபட்ட கருத்துள்ளவர்கள் கதி அதோகதிதான். உயிருக்கே ஆபத்துதான்.

முற்போக்காளரான ஜனநாயகக் கட்சியார், பழைய கொள்கைகள் எல்லாவற்றையும் ஒழிக்க வேண்டும் என்று கூறவில்லை. நல்லனவாகவுள்ள பழைய கொள்கை

---

மாண்டிசோரி குழந்தைகளின் பள்ளிக்கூட வாத்தியார், 1½ வயது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதுதான் என் தொழில். எனக்கு வைத்தியம் தெரியாது. குழந்தைகளின் துன்பத்தைப்போக்க மந்திரவாதிகளால் முடியாது என்பது என் நம்பிக்கை. "குழந்தைகளின் நோயின் குணத்தையும், குழந்தைகளின் குணங்களையும் (இயல்பு) உணர்ந்தவர்களைக் கொண்டுதான் குழந்தைகளை வளர்க்கவோ அவர்களுக்கு வைத்தியம் செய்யவோ வேண்டும்" என்று கூறி விடை பெற்றுச் சென்றார்.

சில மாதங்களில் அந்தக் குழந்தையை, மாண்டிசோரி குழந்தைப்பள்ளிக்கூடத்தில் பெற்றோர்கள் சேர்த்து விட்டனர். அவன் இப்பொழுது நிழலைக் கண்டு பயப்படுவதில்லை. ஏன்? பேய், பிசாசு, பூச்சாண்டி, என்றால் கூடப் பயப்படுவதில்லை!

களை வைத்துக்கொண்டு ஜனங்களுக்குத் தீமைபயக்கும் கொள்கைகளை மாற்றவேண்டும் என்கிறார்கள். பொதுஜனங்களுக்கு அரசியலில் உண்மையான பங்கு இருக்கவேண்டும் என்கின்றனர். பொருளாதாரம், விவசாயம், தொழிற்சாலைகள், வியாபாரம் இவைகளைப் பெருகச்செய்து மக்களுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று கூறுகின்றனர். இவைகளுக்கெல்லாம் கன்பூசியஸ் கொள்கை முட்டுக்கட்டையாக இருப்பதினால் அதை எதிர்க்கின்றனர்.

சீனநாட்டின் புரட்சிவீரராகிய சன்யாட்சன் மனைவியாரும், சியாங்கெஷேக்கின் மைத்துனியுமாகிய சன்யாட்சன் அம்மையார், பழைய கன்பூசியஸ் முறையைப் பற்றி இவ்வாறு கூறுகிறார். "இப்போதைய நமது ஜனசமூகம் முற்போக்கடைந்துகொண்டிருக்கிறது. பழைய கன்பூசியஸ் வழக்கம் இப்போதைய முன்னேற்றத்திற்கு உதவிசெய்யாது. கன்பூசியஸ் முறை, தொடக்கத்திலிருந்து முடிவுவரையில் பாட்டாளி மக்களை வேறாகவும், பணக்காரக் கூட்டத்தை வேறாகவும் பிரித்து வைக்கிறது. நம்முடைய வாழ்க்கையிலிருந்தும், எண்ணத்திலிருந்தும், கருத்திலிருந்தும் கன்பூசியஸ் கொள்கையை வேரோடு பிடுங்கி எறியவேண்டும்"

ஆனால் பிற்போக்காளரின் தலைவராகிய சியாங்கெஷேக், தமது பிற்போக்குக் கொள்கைப்படி கன்பூசியஸ் வழக்கம்தான் சீனநாட்டுக்கு நல்லது என்று கூறுகிறார். "சீனநாட்டுக்குச் சொந்தமான வாழ்க்கைத் தத்துவமானது, கன்பூசியஸால் வளர்க்கப்பட்டு மென்வியஸ் என்பவரால் பிரசாரம் செய்யப்பட்டு, ஹான் பண்டிதர்களால் வியாக்யானம் செய்யப்பட்டுள்ளது. இது உலகத்தில் உள்ள தத்துவங்களுக்கெல்லாம் மேலானது. பழைய சீனாவின் அறிவு மேல்நாட்டு அறிவுகளுக்கெல்லாம் மேலானது" என்று புகழுகிறார் சுயநலக்கட்சியின் தலைவர் சியாங்கெஷேக்.

நமது நாட்டிலே, அழுகி நாறிப்போன உதவாக்கரைப்புராணசாஸ்திரங்களைப்பிற்போக்காளர் தமது சுயநலத்தின் பொருட்டுப் புகழ்ந்து பிரசாரம் செய்து வருவதுபோல, சீன [illegible]த்திலும் அழுகி உளுத்துப்போன கன்பூசியஸ் தத்துவத்தை ஆதாரமாகக்கொண்டு சுயநலக்கூட்டம் சீனமக்களை அடக்கியாளப் பார்க்கிறது. நமது சென்னை மாகாணத்தில் பகுத்தறிவும், விசாலமான முற்போக்கு எண்ணங்களும், மாணாக்கருக்கும், ஆசிரியருக்கும், ஏற்படாதபடி தடுத்து கல்வி இலாகா அடக்குமுறை ஆட்சி செய்வதுபோல, சீனாவிலும் சியாங்கேஷேக் அரசாங்கம் மாணவருக்கும் ஆசிரியருக்கும் முற்போக்கு எண்ணம் பரவாதபடி தடுத்துப்பிற்போக்குடைய கன்பூசியஸ் கொள்கையைப் பரப்பி வருகிறது.

சுருக்கமாகக் கூறினால் நமது நாட்டு நிலைமையும் சீனநாட்டின் நிலைமையும் ஒன்றே. ஏதேனும் வித்தியாசம் இருந்தால், அது சீன நாட்டில் உள்நாட்டுப்போர் மும்முரமாக நடந்து வருகிறது; நமது நாட்டில், உள்நாட்டுச் சண்டை இப்போதுதான் தொடங்கியிருக்கிறது என்று கூறவேண்டும்.

ஜர்மனியிலும் இத்தாலியிலும் தலைவிரித்துப் போராட்டம் ஆடி, அழிந்து ஒழிந்துபோன பாசிஸ்ட்டு ஆட்சி இப்போது சீனதேசத்திலும் இந்தியா தேசத்திலும் புகுந்து பேயாட்டம் ஆடிவருகிறது..

## "போராட்டம்"

9—12—47 அன்று வட ஆற்காடு ஜில்லா மாஜிஸ்திரேட் முன்னிலையில் "போராட்டம்" என்ற வார வெளியீட்டிற்குப் பதிப்பாளராகத் தோழர் மா. நா. இராசமாணிக்கம் பதிவுசெய்துகொண்டுள்ளார். பத்திரிகை விரைவில் வர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.


# எங்களிடம் கிடைக்கும் நூல்கள்

## தலைவர் பெரியார்

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| திருச்சிப்பிரசங்கம் | 0 | 2 | 0 |
| பெண்கள் அலங்காரப் பொம்மைகளா? | 0 | 1 | 0 |
| காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம் | 0 | 1 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |
| ஜஸ்டிஸ் கட்சிக்குக் கிராக்கி, புதுக்கட்சியா? | 0 | 1 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |

## கவிஞர் பாரதிதாசன்

| | | | |
|---|---|---|---|
| பாரதிதாசன் கவிதைகள் | 3 | 8 | 0 |
| பாண்டியன் பரிசு | 3 | 8 | 0 |
| கற்கண்டு | 2 | 0 | 0 |
| எதிர்பாராத முத்தம் | 1 | 4 | 0 |
| அழகின் சிரிப்பு | 1 | 0 | 0 |
| நல்லதீர்ப்பு | 0 | 10 | 0 |
| தமிழ் இயக்கம் | 1 | 0 | 0 |
| காதல் நினைவுகள் | 0 | 12 | 0 |
| குடும்பவிளக்கு I | 0 | 10 | 0 |
| " II | 0 | 6 | 0 |
| இசையமுது | 0 | 12 | 0 |
| அமைதி | 0 | 8 | 0 |
| இரணியன் அல்லது இணையற்ற வீரன் | 0 | 8 | 0 |

## அறிஞர் அண்ணாதுரை

| | | | |
|---|---|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2 | 4 | 0 |
| கம்பரசம் | 1 | 8 | 0 |
| குமரிக்கோட்டம் | 1 | 0 | 0 |
| வர்ணாஸ்ரமம் | 0 | 12 | 0 |
| விடுதலைப்போர் | 1 | 0 | 0 |
| கற்பனைச்சித்திரம் | 1 | 0 | 0 |
| திராவிடர் நிலை | 0 | 6 | 0 |
| ஏ தாழ்ந்த தமிழகமே | 0 | 8 | 0 |
| ஆரியமாயை | 1 | 0 | 0 |
| நல்ல தீர்ப்பு | 0 | 4 | 0 |
| நாடும் ஏடும் | 0 | 6 | 0 |
| மே தினமும் திராவிடர் கழகமும் | 0 | 5 | 0 |

## புதுவை சிவம்

| | | | |
|---|---|---|---|
| கோகிலராணி (நாடகம்) | 1 | 4 | 0 |
| மறுமலர்ச்சிக் கவிதைகள் | 0 | 8 | 0 |
| தன்மதிப்புப் பாடல்கள் | 0 | 6 | 0 |

## கோரநாதன்

| | | | |
|---|---|---|---|
| சினிமாவில் கடவுள்கள் | 0 | 4 | 0 |
| ஈட்டிமுனை | 0 | 8 | 0 |
| கோவில்களை மூடுங்கள் | 0 | 6 | 0 |

## மு கருணாநிதி

| | | | |
|---|---|---|---|
| பலிபீடம் நோக்கி | 0 | 6 | 0 |
| பெரிய இடத்துப்பெண் | 0 | 8 | 0 |

பாதித்தொகையாகிலும் முன்பணமாக அனுப்பப்படுகிற ஆர்டர்களை மட்டுமே கவனிக்கப்படும். வியாபாரிகளுக்கு மட்டுமே கமிஷன் உண்டு.

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.


Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.